# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



கூத்தாடும் பிள்ளையார்

Vol. 8. Nos 1-12
October 1965
to
Sept 1966

மலர் 8 விசுவாவசு புரட்டாசி - அக்டோபர் 1965 [ மணி 1 ]

சென்னை அரசாங்க அறநிலையப்

CONNEMARA P LIBRARY

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு புரட்டாசி-அக்டோபர் [மணி 1

139781

31K5

## திருநாவுக்கரசர்
## உழவாரத் தொண்டின் சிறப்பு

திருநாவுக்கரசர் தொண்டு நெறியின் சிறப்பினை, உலகுக்கு விளக்குதற்கென்றே தோன்றியருளிய ஓர் அருட்பெருஞ் சான்றோர் ஆவார்.

"திருநாவுக்கரசு, வளர் திருத்தொண்டின்
நெறிவாழ வரும்ஞானத் தவமுனிவர்......"

என்பது சேக்கிழார்சுவாமிகள் விளக்கம். திருநாவுக்கரசரை நினைக்கும்பொழுதெல்லாம் அவருடைய பல பெருஞ் சிறப்பியல்புகளுள் ஒன்றாகிய **உழவாரப்படையினையும்** சேக்கிழார் நினைவுகூர்கின்றார்.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுர வாக்கிற்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்
செம்பொற்றாளே
சார்வான திருமனமும் **உழவாரத்** தனிப்படையும்
தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப்
பரவிச் செல்வார்.

எனவரும் சிறந்த பெரியபுராணச் செய்யுளில் சேக்கிழார் சுவாமிகள், திருநாவுக்கரசர் உழவாரத் தனிப்படையுடன் பிரிவற இயைந்து விளங்கும் நிலையினை வியந்து குறிப்பிடுகின்றார்.

**'உழவாரம்'** ஒரு சிறந்த ஒப்புயர்வற்ற படை என்றும், அதனைத் **திருநாவுக்கரசர்** இடைவிடாமல் எப்பொழுதும் தம்மிற் பிரிவற இயையுமாறு ஏந்திக் கொண்டிருக்கின்றார் என்றும் உணர்த்த **"உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகி"** எனக் குறிப்பிடப்பெற்றிருத்தல் காணலாம். மேலும் அதனால் அவர் திருக்கோயில்களின் உள்ளேமட்டும் அன்றி, இறைவனும் அவனடியார்களும் உலாப்போதரும் திருவீதிகளையும்கூட, கல்லும் முள்ளும் முதலியன இன்றித் தூய்மைப் படுத்திப் பணிசெய்கின்றாராம்; இதனைத் **"திருவீதிப்பணி செய்து"** என்றுவரும் தொடரால் அறிகின்றோம்.

**திருநாவுக்கரசர்** உழவாரத் தொண்டினுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தார், அதனை அவர் எத்துணை அளவுக்குச் சிறப்பாகக் கருதிப் பெரிதும் ஈடுபட்டிருந்தார் என்பதும், நாம் எண்ணியுணர்ந்து பின்பற்றத் தக்க நிலையில் உள்ளது. திருநாவுக்கரசர் இறைவனைப் பணிதலை இரண்டாவதாகவும், உழவாரப் பணி செய்தலையே முதலாவதாகவும் கொண்டிருந்தார். ஒவ்வொரு தலத்திற்

கும் சென்றதுமே அவர் முதலாவதாகத் தம் உழவாரத் திருப்பணியையே செய்வார். அதனைச் செய்து முடித்தபின்னரே, இறைவனைப் பணிதலில் தலைப்பிடுவார். இக்குறிப்பு **"பணிசெய்து பணிந்தேத்தி"** எனவரும் சொற்றொடர் அமைப்பினாற் செவ்விதிற் புலனாகின்றது.

மேலும் இவ்வுழவாரத் திருப்பணியைச் செய்தலில், **திருநாவுக்கரசர்** துணைக்காகப் பிறர் எவரையும் எதிர்பாராமல், தாம் ஒருவராக இருந்தாலும் செய்தலைக் கடப்பாடாகக் கொண்டிருந்தார் என்பது **"உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப் பணிசெய்து"** எனக் கொள்ளக்கிடக்கும் திறம்பற்றி உணரலாம். மேலும் இத்தொண்டினை அவர் தாம் வாழ்வதற்காகத் தன்னலம்பற்றிச் செய்தனர் அல்லர். உலகம் வாழ்வதற்காக உலக நலம் குறித்தே செய்தருளினர் என்பது. **"பார்வாழப் பணிசெய்து"** என்று **சேக்கிழார் சுவாமிகள்** விளக்கியருளுதலால் தெளியப்படும்.

இவற்றையெல்லாம் எண்ணியுணருங்கால், **திருநாவுக்கரசர்** செய்தருளிய உழவாரத் திருத்தொண்டின் சிறப்பு, எல்லையில்லாச் சிறப்புடையதாதலை நாம் தெளிவுற அறியலாம். எண்பத்தோராண்டான முதுமை நிலையில் தளர்ச்சி யுறப்பெற்றிருந்த **திருநாவுக்கரசர்** தம்முடைய உடல் தளர்ந்தும் உள்ளம் தளராமல், உழவாரப் பணியினை இடைவிடாமற் செய்தனர் எனின், நாம் அனைவரும்கூட அச்சிறந்த பணியினைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம் அன்றோ? வெறும் வாய்ப்பேச்சளவில் மட்டுமேயன்றி நாம் மெய்த்தொண்டும் கைத்தொண்டும் செய்து வருதல் வேண்டும். **மெய்த்தொண்டாம் கைத்தொண்டும்** (தேவாரம் பாடுதல் மட்டுமேயன்றி உழவாரத்தொண்டும்) செய்த சிறப்பினால்தான், **திருநாவுக்கரசர் திருவீழிமிழலையில்** வாசியில்லாக் காசு பெற்று மகிழ்ந்தார். இவ்வுண்மையினை,

"கைத்தொண்டாகும் அடிமையினால்
வாசியில்லாக் காசுபடி
பெற்றுவந்தார் வாகீசர்"

எனப் பெரியபுராணம் தெளிவித்திருத்தல் நாம் அறிந்து குறிக்கொளத் தகுந்தது.

உழவாரத் தொண்டினை அப்பர் சுவாமிகள் தம் வாழ்நாள் முழுவதும், தம் எண்பத்தொன்றாம் அகவையிலும் கூட, இடைவிடாமற் செய்துவந்தார். இவ்வுண்மை அவர் இறைவனோடு கலப்பதற்குமுன் **திருப்புகலூரில்,**

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புக எறிந்தார்

எனக்கூறும் பெரியபுராணப் பாடலால் தெளியலாம்.

139781

இங்ஙனம் **திருநாவுக்கரசர்** பெருமான் செய்து காட்டிய உழவாரத்தொண்டின் நெறியினை, நாம் அனைவரும் பெரிதும் போற்றிப் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம். **உழவாரப் பணி என்பது புல் செதுக்குதல், முள்ளும் கல்லும் எடுத்தல் மட்டுமேயன்று. உபலக்கண முறையினால், திருஅலகிடுதல் திருமெழுக்கிடுதல், திருவிளக்கு ஏற்றுதல், மலர்மாலை கட்டியளித்தல், நந்தவனப் பணிபுரிதல் முதலிய மற்றும் எத்துணையோ பல திருக்கோயில் தொண்டுகளையும் உள்ளடக்கிக் குறித்துக்கொண்டு நிற்கின்றது.** திருநாவுக்கரசரைப் போற்றும் நாம் அனைவரும் அவர் செய்து காட்டியருளிய முறையில், இவ்வெல்லாப் பணிகளையுமே அன்போடு செய்ய முன்வருதல் நலம்.

திருவிழாக் காலங்களில் நம் திருக்கோயில்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒருங்கே கூடுகின்றனர். அவர்களிற் பலப் பலர் தம் அசட்டைத்தனத்தினாலும், அறியாமையினாலும், கோயில்களின் உள்ளும் புறமும் சுற்றுமெல்லாம் அசுத்தம்செய்து, அருவருப்பை விளைவிக்கின்றனர். இத்தகைய அசுத்தங்கள்

நேராமற் பார்த்துக்கொள்ளுதல் போன்ற கடமைகளையும்கூட, நம் தமிழ்நாட்டின் தலைசிறந்த ஞானப் பெருஞ்சான்றோர் ஆகிய திருநாவுக்கரசர் பெருமானின் அடிச் சுவட்டினைப் பின்பற்றி ஒழுதலில், உண்மையார்வமும் ஊக்கமும் உடைய அன்பர்களின் **திருக்கூட்டங்கள்** தோன்றிக் கவனித்துக்கொள்ளுதல், கடவுட் பெருந் தொண்டுகளுள் ஒன்றாகும்.

முன்பெல்லாம் இறைவன் திருவிழாக் களில் உலாவரும்போது, தம் தோள் கொடுத்துத் தாங்கிவருதலையும், திருத் தேர் இழுத்து உதவிபுரிதலையும் ஒரு பெற லரும் பேருக நம் முன்னோர்கள் கருதியிருந்தனர். அத்தகைய உயர்ந்த கடவு ளன்பும் பண்பும் இன்று நம்மிடையே காணப்படவில்லை. அதனுல் இன்று பல அவல நிலைகள் நேர்ந்துள்ளன. எனவே இதுபோன்ற கடவுட் பணிகளிலும் நம் உழவாரத் தொண்டர் படையினர் போன்றவர்கள், சமயம் நேரும் பொழுது பணியாற்றத் தயங்காமல் முன்வருதல் வேண்டும்.

பண்டைக்காலத்தில் அரசனுக்கு மட்டுமேயன்றித் திருக்கோயில் திருமடங்கள்போன்ற சமய நிலையங்களுக்கும் '' வேளைக்காரப்படை '' என ஒன்று (Volunteer Force) இருந்து வந்தது. அப் படையானது, சமய நிலையங்களுக்கு அல்லது அறக்கட்டளைகளுக்கு அன்னியர் படையெடுப்பு முதலிய காரணங்களால் ஏதேனும் ஆபத்து நேரும் என்று தெரியுமாயின், அத்தகைய முக்கியமான இன்றியமையாத வேளைகளில் தாமாகவே முன் வந்து தம்முடைய உயிரைக் கொடுத்தேனும் அவற்றைக் காப்பாற்றச் சித்தமாக இருப்பர். மக்கள் அனைவருக்குமே பழங்காலத்தில் அத்தகைய சிறந்த உணர்வும், தியாக மனப்பான்மையும் இருந்தன. எல்லாக் கல்வெட்டுகளிலும் "இத் தருமம் பன்மாகேச்வர ரக்ஷை." என்று குறிப் பிடப்பட்டிருத்தலைக் காண்கின்ருேம்.

ஆதலின், திருநாவுக்கரசர் பெருந்தகை நிகழ்த்தியருளிய உழவாரத் தொண்டின் சிறப்பினை யுணர்ந்து போற்றி யுய்யும் முறையில், நாமும் நம்முடைய **நாட்டிற்கும்** சமயத்திற்கும் நம்மால் இயன்ற நற் பணிகள் பலவும் செய்து, இறையருளைப் பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| சென்னைக் கந்தகோட்டம் கலியாணசத்திரத் திறப்பு விழா | ... | | 1—9—1965 |
| நாச்சியார்கோயில் ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கல்யாணவிழா | | 1—9—65 | 4—8—'65 |
| தோப்புத்துறை வரதராஜப்பெருமாள் வருடப் பெருவிழா | | 31—8—'65 | 8—9—'65 |
| மயிலம் சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணிக்குழு அமைப்பு விழா | ... | | 2—9—'65 |
| விச்சூர் கிராமம் பரப்பிரம்ம யோகஞான ஆலயம் 64-ஆம் திருநட்சத்திர விழா | ... | | 3—9—'65 |
| இராஜமன்னர்குடி சொக்கநாதசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் | ... | | 8—9—'65 |
| திருத்துறைப்பூண்டி பிறவிப்பிணி மருந்தீசர் கோயில் மகா கும்பாபிஷேகம் | ... | | 9—9—'65 |
| மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆவணி மூல விழா | | 22—8—65 | 9—9—'65 |
| திருவேடகம் ஏடகநாதசுவாமி கோயில் ஏடு எதிர் ஏறிய விழா | ... | | 10—9—'65 |

# 'வீர சைவம்'

'வீர சைவம்' என்னும் சொல் பேச்சு வழக்கில் மக்கள் பலராலும் பலகாலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் மக்கள் அதன் உண்மைச் சொற்பொருளையுணர்ந்து கொள்ளாமல், விபரீதமான முறையில் மிகவும் பிழையான திரிபுபட்ட பொருட்குறிப்பிலேயே வழங்கி வருதலைக் காண்கின்றோம். 'வீரம்' என்பதனை மக்கள் பலரும், முரட்டுத்தனம் பிடிவாதம் மூர்க்கத்தனம் என்பன போன்ற பொருட்களின் குறிப்பிலேயே, பெரிதும் தவறாக வழங்கி வருகின்றனர். 'வீரசைவம்' என்றால், அஃது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சைவம் போலும் என்றே மக்கள் பலரும் பொதுவாகப் பிழைபடக் கருதுவதாகத் தெரிகின்றது.

'வீர சைவம்' என்பது கன்னட நாட்டில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒருவகை மறுமலர்ச்சி இயக்கச் சமயம் ஆகும். சிவவழிபாட்டிலும் நெறியிலும் மிகவும் ஈடுபாடு கொண்டு, உறுதியுடன் அசைவின்றி நின்ற சமயமே 'வீரசைவம்' என்னும் சிறப்புப் பெயர் பெறுவதாயிற்று.

வீரசைவ இயக்கத்தைத் தோற்றியருளியவர் **ஸ்ரீ பசவர்** என்னும் கன்னட நாட்டுச் சான்றோர் ஆவர். அவர் பிராம்மண குலத்தில் தோன்றியருளியவர். பம்பாய்க்கு அருகேயுள்ள **கல்யாணி** நகரில் ஆண்டு வந்த **விச்சலன்** (கி. பி. 1157—67) என்னும் அரசனின் தலைமை அமைச்சராக விளங்கியிருந்தவர். இவரைத் திருநந்திதேவர் அவதாரமாகப் பசவ புராணம் முதலிய வீர சைவ நூல்கள் கூறும்.

நமது தமிழ் நாட்டில், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சமய குரவர்கள் நால்வராலும், அவர்கள் வழியே தோன்றிய மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாசாரியர் என்னும் சந்தான குரவர்கள் நால்வராலும் பரப்பி வளர்க்கப்பட்ட சிவவழிபாட்டுக் கொள்கையும் நெறியுமே 'சைவ சமயம்' 'சித்தாந்த சைவம்' 'சைவ சித்தாந்தம்' என்னும் பெயர்களால் தொன்றுதொட்டு வழங்கி நிலவி வருகின்றது.

ஆயினும் சிவ வழிபாட்டில் உறுதி சிவனடியார்க்குப் பணி புரிதலில் ஈடுபாடு முதலிய சில கொள்கை ஒப்புமைகள் காரணமாக, கன்னட நாட்டில் தோன்றிய வீர சைவம், தமிழ் நாட்டிலும் அங்கங்கே தழுவிக் கொள்ளப் பட்டுப் பரவி நிலைபெற்றுள்ளது.

வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல் என்னும் நூல்களை இயற்றியருளிய கோவைப் பேரூர்ச் **சாந்தலிங்க சுவாமிகள்**, துறைமங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்**, விருத்தாசலம் **குமாரதேவர்** திருவண்ணாமலைக் **குகை நமச்சிவாயர்**, குருநமச்சிவாயர், திருப்போரூர்ச் **சிதம்பர சுவாமிகள்**, மயிலம் **சிவஞானபாலைய சுவாமிகள்**, திருப்பாதிரிப்புலியூர் **ஞானியார் சுவாமிகள்** முதலிய சான்றோர் பெருமக்கள் பலரும், வீர சைவ நெறியினைப் போற்றி ஒழுகியவர்களே ஆவர்! துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய **பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி** முதலியன தமிழிலுள்ள சிறந்த வீர சைவ நூல்கள் ஆகும்.

வீர சைவர்கள், தம் குருவினால் முறைப்படி அளிக்கப்பெற்ற இலிங்கத்தினைத் தலை கழுத்து தோள் மார்பு என்னும் இடங்கள் ஒன்றில், எப்போதும் பிரிவற அணிந்து கொண்டிருப்பர். இலிங்கதாரணம் வீர சைவர்களுக்கு இன்றியமையாத

ஒரு பெருஞ்சிறப்பு அடையாளம் ஆகும். வேதம், ஆகமம், உபநிடதம் புராணம் முதலிய பலவற்றாலும் வற்புறுத்தப் படுவது இலிங்கதாரணம் என்பது வீர சைவக் கொள்கை.

சதுமறை யுள்ளும், மிக்க
சாத்திரங் களினும், ஈரொன்

பதுவித புராணத் துள்ளும்
பகர்தரு காமி கந்தான்

முதல்வரும் ஆக மத்தும்
மொழிந்திடப் பட்டிடும், சங்

ததமும் மெய்விடா இலிங்க
தாரணம் விறற்சை வர்க்கே

—சித்தாந்த சிகாமணி

எனவரும் செய்யுளால், இலிங்கதாரணம் செய்து கொள்ளுதல் வீரசைவத்திற்கு மிகவும் இன்றியமையாத சிறப்பியற் கொள்கை என்பது உணரலாம். அது பற்றியே வீரசைவர்களுக்கு **'இலிங்காயதர்'** என்றும் பெயர் வழங்கும்.

வீரசைவர்கள் தம் உடலில் பிரிவறஎப் பொழுதும் அணிந்து கொண்டு, பூசை புரிந்து வழிபட்டு வரும் இலிங்கத்தை **'இஷ்டலிங்கம்'** எனப் போற்றி வழங்குவர். அதற்குச் செய்யும் பூசை தரிசனம் மூர்த்தம் பிரசாதம் நிஷ்டை தியானம் ஆகியவற்றையே அவர்கள் பெரிதும் முதன்மையும் சிறப்புமாகக் கொள்வார்கள். தந்தமக்குரிய இஷ்டலிங்கத்தைத் தவிர, வேறு பரார்த்தம் என உள்ள பிற லிங்கங்கள் மாட்டும் அவர்கள் அத்துணை அன்பு செலுத்த மாட்டார்கள். கற்புடைய நங்கை ஒருத்தி, தனக்கென விரும்பி வரித்துக் கொண்ட கணவனைத் தவிர வேறு பிறர் எவரையும் மனத்தினுற் கருத மாட்டாளாதல் போல, தனக்குரிய இஷ்டலிங்கம் தவிர வேறு பிறிது எதிலும் அன்பு செலுத்தாத உறுதிப்பாடு உடைமையே 'வீரசைவம்' ஆகும்.

கணவன்பால் இன்பமுறும் கற்புடையாள் வேறோர்

திணவன்பால் இன்பமுறச் சிந்தித்து — அணைவுருள் ;

ஆங்கதுபோல் இஷ்டலிங்கத் தாகும்அன்பு வேற்றுலிங்கத்

தோங்கவிடா தாங்கதும் வீரம்.

—அத்துவித வெண்பா

வீரசைவர்கள், தீக்கை செய்து கொண்டு தம்மைப் போல் இஷ்டலிங்கபூசை செய்து வரும் இயல்பினர் அல்லாத ஏனையோர் பிறர், எத்தகைய சிறப்பும் அன்பும் உடையவர்களே யாயினும், அவர்களோடு ஒன்றாக இருந்து உண்ணுதல் முதலிய எந்தச் செயலையும் செய்ய ஒருப்படாத திடமான கொள்கை யுடையவர்கள் ஆவர்! இத்தகைய உறுதிப்பாட்டினாலும் அவர்களின் நெறிக்கு 'வீரசைவம்' எனப் பெயர் அமைவதாயிற்று.

இவ்விரதம் இல்லாதார் எவ்விரதர் ஆயிடினும்

அவ்வவரோ டொன்றாய் அருந்தல் முதல்- எவ்வெவையும்

உள்ளத்தா லும்நினையா துற்றஇடம் சற்றகலாக்

கொள்கைத்தாம் கோலமும் வீரம்

—அத்துவித வெண்பா.

இங்ஙனம் தமது உடலில் இலிங்க தாரணம் செய்து கொண்டு, தமது ஞானாசிரியர் உபதேசித்தருளிய முறைப்படியே இஷ்டலிங்க பூசை புரிதலில் மிகுந்த திடமும் உறுதியும் பூண்டு ஒழுகும் வீரம் உடைய சைவரே, வீர சைவர் எனப் படுவர்.

இதனைப் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் தெளிவுற விளக்குதல் காணலாம்.

அத்தனை அகம் தரிக்க
அசத்தன் ஆயினும் அதாஅன்று

சத்தனே எனினும் ஞான
தற்பர லிங்க மேஎன்

புத்தியின் திட்பம் எய்திப்
புறத்து இலிங்கம் தரிக்க

வித்தக நெறியு ணர்ந்தோர்
வீர சைவர்கள் தாம் அன்றே

தம் பொருளாம் இலிங்கம் தன்னை
வள்ளிதழ் அவிழ்ந்த
வம்பலர் கந்தம் ஆதி
மருவுற முறையிற் கொண்டு
கம்பமில் மனத்தி னோடு
கரபீடத் தினில்அர்ச் சிப்பர்
இம்பரின் என்றும் சுத்தர்
எனப்படும் வீர சைவர்.

வீரசைவன்' என்னும் சொல்லுக்குத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றிய 'சித்தாந்த சிகாமணி' என்னும் நூலில் பின்வருமாறு பொருள் விளக்குகின்றார்கள்.

(1) அருமை மிகுந்த வேதாந்தச் செந்நெறியினால் விளைகின்ற ஞானமே **வித்தை** எனப்பெயர் பெறும். அவ்வித்தையில் அன்பு கொண்டு ஈடுபட்டு விரவி நிற்பவன் **வீரன்** என்னும் சிறப்பைப் பெறுவான்.

அரியவே தாந்தத்தின் ஆகும் ஞானமே
மருவரும் வித்தை என் றுரைப்பர் ; மற்றதில்
விரவினோன் யாவன்? மற் றனையன் வீரன் என்று
உரைதரு கிற்பர் மெய்யுணர்ந் துளோர்களே

(2) **வீ** என்பது வித்தையைக் குறிக்கும். **ர** என்பது ரமித்தல் அல்லது மகிழ்தலை யுணர்த்தும். சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி. சிவனை வழிபடும் நெறியாகிய ஞான **வித்தையில்** ஆர்வம் கொண்டு ஈடுபட்டு மகிழ்பவன் எவனோ, அவனுக்கு **வீரசைவன்** என்று பெயர்.

சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தை யூடு விசேடம தாகியே
எத்தினால் இங்கு இரமிப்பன்; அன்னவன்
பொய்த்தி டாத புகழ் வீர சைவனே

(3) சிவனும் சீவனும் ஆகிய இருவரும் ஒன்று படுதல் ஆகிய சிவசீவஐக்கியம் என்னும் வித்தையில் பிறப்பு இறப்புக்கள் கெடுமாறு, ஒன்றி மகிழ்ந்து ரமிப்பவன் எவனோ அவன் வீரசைவன் ஆவான்.

தீது அகன்ற சிவசீவ ஐக்யமாம்
வீத ரும்பெரு வித்தையின் நன்குறச்
சாதம் இன்றி ரமிக்கும் அச் சைவன்மற்று
ஓதில் அன்னோன் உயர் வீரசைவனே

இனி இப்பொருள்களி லெல்லாம் வேறாக, மிகவும் புகழ் வாய்ந்த தத்துவ நூற் பேராசிரியர் ஆகிய **சுரேந்திர நாத் தாஸ் குப்தா** என்பவர், ஒரு பொருள் கூறுகின்றார். அயலார் அல்லது பகைவர்களிடம் இருந்து தம்முடைய சமயத்தினைப் பாதுகாத்துக் கொள்ளுதலில் வீரத்திறன் மிக்கு விளங்கியவர்கள் ஆதலின், வீரசைவர்கள் என்று அழைக்கப்பட்டனர் எனக்கொள்ளுதல் பொருத்தம் எனக் குறிப்பிடுகின்றார் அவர்!

நாட்டின் நலத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் அருஞ்செயல்கள் பல ஆற்றலும், உயிர் கொடுத்து உதவுதலும் ஒப்புயர்வற்ற பெருமை யுடையனவாக உலகெங்கணும் மதிக்கப் பெறுகின்றன. அங்ஙனமே தங்கள் சமயநெறிக்குப் பிறரால் கேடு நேராமற் பேணிப் பாதுகாத்துக்கொள்ள முயலுதலும் சிறப்புக் குரியதேயாகும். நாட்டுப் பற்று மிக்கு விளங்கி, அதன் கண் உறைப்பும் விழிப்பும் பெற்றொளிர்தல் இன்றியமையாத கடமையாதல் போலவே, தத்தம் சமய வுரிமைகளையும் பண்பாடுகளையும் நெறிமுறை சிறிதும் பிறழாமற் போற்றிப்

---

(1) "The Siddanta-Sikhamani gives a fanciful interpretation of the word, 'Vira' as being composed of '**Vi**' meaning knowledge of identity with Brahman, and '**ra**' as meaning someone who takes pleasure in such knowledge. But such an etymology accepting it to be correct would give the form 'Vira' and not 'Veera'. No explanation is given as to how 'Vi' standing for 'Vidya' would lengthen its vowel into 'Vee'...

I therefore venture to suggest that Veera-saivas were called Veeras or **Heroes** for their heroic attitude in an aggressive or defensive manner in support of their faith.

—**Surendranath Dasgupta,** A History of Indian Philosophy, Vol V., P. 44-45.

பாதுகாத்துக்கொள்ளும் கருத்தும் கடமையுணர்வும் பெற்று வாழ்தலும் பெருமைக் குரியதாகும் என்பதில் ஐயமில்லை. கி. பி. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் தம் கன்னட நாட்டில், சைவ சமயம் நலிவுற்றழிந் தொழியாமற் பொலிவுறச் செய்யும் பொருட்டு, அதன்கண் ஆழ்ந்த பற்றும் அளப்பரிய ஈடுபாடும் வாய்ந்து சிவலிங்க தாரணம் செய்து கொண்டு சிவவழிபாட்டில் உறைத்து நின்றவர்களே, வீர சைவ நெறியினர் என்பது சாலவும் பொருந்துவதேயாகும். தாஸ்குப்தா அவர்களின் கருத்தை வலியுறுத்தும் முறையில் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் அமைந்திருத்தலும் அறிந்து இன்புறுதற் குரியன.

யாண்டொரு தாவ ரத்திற்கு
இடையூறு வரினும், பத்தர்க்கு
ஏண்தரு சிவவே டத்தோர்க்கு
இடர்கள்வந் துறினும், நில்லாது
ஆண்டுஉயிர் விடுத்தே யேனும்
அளிக்க! மெய்ப் பரன் பொருட்டு
மாண்டவன் சிவனே டொன்றும்
பதத்தினை மருவும் அன்றே!

**முடிவுரை:**

இதுகாறும் விளக்கியவற்றால், 'வீர சைவம்' என்பது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சைவம் போலும் எனச் சாதாரண மக்கள் சிலர் கருதுவது தவறு என்பதும், கன்னட நாட்டில் தோன்றியருளிய பசவர் முதலிய சான்றோர்களால் வளர்க்கப் பெற்ற ஒரு சிறந்த பண்பாட்டு நெறியே அஃது என்பதும், தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் பலர் அதனைத் தழுவிப் போற்றி வளர்த்து மகிழ்ந்துள்ளனர் என்பதும் பிறவும் தெளியப்படும்.

—ஆசிரியர்.

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் அறுபத்து மூவர் சந்நிதி மகா கும்பாபிஷேகம் | ... | 10—9—1965 |
| திருமாகறல் மாகறலீசுவரர் கோயில் இலட்சார்ச்சனை இலட்சதீப விழா | ... | 12, 13—9—'65 |
| திருநாராயணபுரம் நூதன நவக்கிரகப் பிரதிட்டை மகா கும்பாபிஷேகம் | ... | 13—9—'65 |
| ஆவராணி புதுச்சேரி அகிலாண்டேசுவரி சமேத நடேசர் கோயில் மகா கும்பாபிஷேகம் | ... | 13—9—'65 |
| இளையாத்தகுடி கயிலாசநாதர் கோயில் நவராத்திரி விழா | 25—9—65 | 4—10—'65 |
| வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையங்கள், வள்ளலார் வெள்ளிவிழா | ... | 27—9—'65 |

# விடை தெரியுமா?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையாளர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் வரும் வினாக்கள், கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்துகொண்டு மகிழ்வதும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் ''சிறு துளி பெருவெள்ளம்'' என்னும் நிலையிலும், ''எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்'' என்ற முறையிலும், சமயத் துறையிற் பொதுவாகப் பலதுறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்து கொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன்படுமாறு அமைவதற்கு, இறையருள் துணை புரிவதாக! —ஆசிரியர்]

1. 'சைவ சித்தாந்த சாத்திரங்கள்' எனப்படுவன எத்தனை? முறையே அவற்றையும், அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக.

2. முருகப் பெருமானுக்குத் துணைவரும், உடன்பிறப்பாளரும் ஆகக் கருதப் பெறும் **நவவீரர்களின்** பெயர்களைக் கூறுக.

3. **கண்ணகி, தாடகை** என்னும் பெயரில் இருவர் இருந்திருக்கின்றனர். அவர்கள் இன்னின்னவர் என்று சுட்டுக.

4. **'ஆகமம்'** என்னும் சொற்குப் பொருள் யாது? சிவாகமங்கள் இருபத்தெட்டின் பெயர்களையும் முறையே தெரிவிக்க.

5. பின்வரும் பெயர்கள் எவ்வெத்தலத்தில் உள்ள விநாயகர்க்கு உரியவை?

   (1) விகட சக்கர விநாயகர்

   (2) வாதாவி விநாயகர்

   (3) சித்தி விநாயகர்

   (4) கற்பக விநாயகர்

   (5) ஆனை திறைகொண்ட விநாயகர்.

6. **'அர்த்த பஞ்சகம்'** என்பது யாது? விளக்குக.

7. **'பாஞ்சராத்திரிகள்'** என்று யாருக்குப் பெயர்? **'பாஞ்சராத்திரம்'** என்னும் பெயர்க்குக் கூறப்படும் காரணங்களைத் தெளிவுறுத்துக

8. திருவாய்மொழிக்கு உள்ள வியாக்கியானங்களின் பெயர்களையும், அவற்றினை எழுதினோர் பெயரையும் கூறுக.

9. **'திருத்தணி' 'செருத்தணி'** – இரண்டில் எது சரி?

10. முதற் குலோத்துங்க சோழன் கட்டிய கோயில்களுள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடுக.

(விடை 17-ஆம் பக்கம் பார்க்க)

# மாலைமாற்றுப் பதிகம்

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம், 562)

மேலே போகா மேதேழீ காலாலேகா லானையே
யேனலாகா லேலாகா ழீதேமேகா போலேமே

### இதன் பொருள்

மேலே—மார்க்கண்டேயரின் மீது
போகாமே—கூற்றுவன் வெகுண்டு செல்லாமல்
தேழீ—அதட்டித் தெழித்தருளியவனே
காலாலே—திருவடியினால்
கால் ஆனையே—காலனுக்கும் காலனாகி விளங்கினையே
ஏல்—ஏற்றுக் கொள்ளத் தகுந்த
நால்—சனகர் சனந்தனர் சநாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களும்
ஆகு—ஞானாசிரியனாக எழுந்தருளி
ஆல்—கல்லால மர நிழலில்
ஏலா—அவர்களை ஏற்றருளியவனே
காழீதே—சீர்காழியில் விளங்கும் முழுமுதற் தெய்வமே
மேகா—மேகம் போலும் கொடைத்தன்மை யுடையவனே
போலேமே—அடியேங்கள் நின் தொண்டர் திரளில் ஒருவரைப்போல் ஆக மாட்டோமா?

### விளக்கக் குறிப்பு

தெழித்தல்—அதட்டுதல்
தெழி—**தேழீ** என வந்தது; விளி வேற்றுமை
ஆகு + ஆல் + ஏலா— **ஆகாலேலா** என வந்தது.
ஏல்—ஏற்றல்; முதனிலைத் தொழிற் பெயர்
ஏலா—ஏற்றருளியவனே
**மேகா**—மேகத்தை மழை பொழியுமாறு செய்பவனே எனினுமாம்.
''பயிர் விளைக்கும் **புயல்** அவன் காண்'' என்பது தேவாரம்.

**போலேமே**—போல ஆக மாட்டோமா? ஆகும்படி செய்தருள்க என்பது கருத்து. (6)

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ

### இதன் பொருள்

நீயா—நீங்குதல் இல்லாத
மாநீ—உமா தேவியை யுடையவனே
ஏயா—ஒப்பு இல்லாத
மாதா—தாயாக விளங்குபவனே
ஏழீ—ஏழு இசையின் வடிவாகத் திகழ்பவனே
கா நீதானே—நீயே எளிவந்து எம்மைக் காப்பாற்றுக
நே—நேயம் மிகுந்த நெஞ்சினையே
தாநீ—இடமாகக் கொண்டருள்பவனே
காழீ—சீர்காழியில் விளங்கும்
வேதா—வேதங்களின் பொருளானவனே
மாய்—எங்களைக் கொல்லவரும்
ஆநீ—துன்பங்களை
மாயாயே நீ—நீ மாய்த்தருள மாட்டாயா?

### விளக்கக் குறிப்பு

நீ—நீத்தல், நீங்குதல்
நீயா—நீங்குதல் இல்லாத
மாநீ—**மானி** என்பதன் விளி வேற்றுமை.

மானம் உடையவள் மானி எனப் படுவள்; கற்பின் மிக்க பெண்கள் அனை வரையும் குறிக்கும் இச்சொல், இங்கு உமாதேவியாரைக் குறித்து வந்தது.

ஏய்தல்—பொருந்துதல்; ஒத்திருத்தல்.
ஏயா—ஒப்பு இல்லாத.
ஏழிசை—குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன.

நே-நேயம், அன்பு அஃது ஆகுபெய ராய் நெஞ்சத்தைக் குறித்தது

**தாநீ**—ஸ்தாநத்தை யுடையவன்; ஸ்தானம், தானம்—இடம்.

**ஆநீ**— ஹாநி, ஆனி, துன்பம் (7)

**நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா**

**காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே**

## இதன் பொருள்

நே—நேயம் மிகுந்து

அணவர்—திருவடியை நெருங்கியிற்கும் மெய்யடியார்களின்

ஆ—ஆவிகள்

விழ—தம் வயமற்றுக் கிடக்க

யா—யாத்துக் கட்டிய

சை—ஆசையாகிய கயிற்றினை

ழியே—அருளால் அவிழ்த்தருள்பவனே

வேக—வேகத்தினையுடைய மானின்

அதள் ஏரி—தோலினை அழகுபெற அணிந் தருள்பவனே

அளாய—துன்பங்கள் கலந்த

உழி—இடங்களில்

கா—எம்மைக் காத்தருள்க

காழியுளாய்—சீர்காழிப் பதியில் வீற்றிருப் பவனே

அரு—மன்னிப்பதற்கு அரிய

ஏது—குற்றங்களை

இளவு—எம் சிறுமைத் தன்மையினால் யாம் செய்து விட்டோம்

அஃகவே— (ஆதலின்) அவை நின்னால் பொறுத்தருளத் தக்கனவே ஆகுக

ஏழிசை—ஏழிசைகளும் பாடுதலில் வல்ல

இராவணனே— இராவணனும் கூடத் தான் செய்த பெரும் பிழைகள் நின்னாற் பொறுக்கப்பட்டனன் அல்லனோ?

## விளக்கக் குறிப்பு

**அணவர்**— அண்மையில் உள்ளவர்கள்; அடியார்கள். அண்மை—அருகு, சமீபம்.

**ஆ**— ஆவி, ஆன்மா

**விழ**— அவிழ; முதற்குறை

**சை**— ஆசை; முதற்குறை

**ழியே**— அவிழியே, அவிழ்த்தருள் பவனே; முதற்குறை

வேகம்— வேகமாக ஓடும் மானைக் குறித்தது

அதள்— தோல்

**ஏரி**— ஏர் (அழகு) என்னும் சொல்லடி யாகப் பிறந்தது; அழகுபெற அணிந் தருள்பவன் என்னும் பொருளைக் குறித்தது.

**ஏது**—ஏதம், குற்றம்; கடைக்குறை

**இளவு**— இளமைத் தன்மை, சிறுமை, அற்பத்தனம்

அஃகுதல்— நுணுகுதல், சிறியதாதல், பொறுக்கப்படுதல்

**யாழ**— முன்னிலை அசைச்சொல்; (8)

**காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ**

**பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா**

## இதன் பொருள்

காலே மேலே—எல்லாப் பொருள்களுக்கும் முதலும் முடிவுமாக இருப்பவனே

காணீ— அடியார்களுக்குப் பெருஞ்செல்வ மாக விளங்குபவனே

காழீ— காழிப் பதியில் உள்ளவனே

மாலே— எல்லோரையும் மயக்கம் செய்ப வனே

மேபூ— மேன்மையுடன் பூத்த

பூமேலே— தாமரைமலரின் மேலே வீற்றி ருக்கும் பிரமதேவனும்

மாலே— திருமாலும்

காலே மேலே— திருவடியையும் திருமுடி யையும்

காண் நீ காழீ—காண்பதை நீக்கிய உறுதிப் பாடு உடையவனே

கா—எம்மைக் காத்தருள்க.

## விளக்கக் குறிப்பு

கால் மேல்— முதலும் முடிவும்

**காணி**— நிலம். சொத்து, பெருஞ் செல்வம்

மால்— மயக்கம், மயக்கம் செய்பவன்

பூமேல் ஏ(ய்)— தாமரைமலரில் வீற்றி ருக்கும் பரமன்.

**காழ்**— மரத்திலுள்ள வயிரம்; உறுதிப் பாடு

நீ— நீத்தல், நீக்குதல்

[பூமேல் ஏ(ய்)— தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும்,

மாலே—திருமாலும் ஆக விளங்குபவனே

காழீ—அடியார்களைக் காத்தலில் உறுதிப்பாடு மிக்கவனே

**காண்**—எம்மைக் கடைக் கணித்தருள் ; கண்டுகொள்

**ஈ காலே**—நின் திருவடிகளை எமக்கு ஈந் தருள்க

**மேலேகா**—மேற்கொண்டும் (மேற்பிறவிகளிலும்) எம்மைக் எம்மைக் காப்பாறுக!]

எனவும் ஒருவாறு பொருள் கொள்ளலாம். (9)

**வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகரதே**

**தேரகளோடம ணேநினையே யேயொழிகாவண மேயுரிவே**

## இதன் பொருள்

வேரியும்— வாசனையும்

ஏண்— பெருமையும்

நவம்— புதுமையும் கொண்ட

காழியொயே—சீர்காழிப் பதியில் உள்ளவனே

ஏனை— பிறிதாகிய வெறுப்பையும்

நீள்நேம்— நீண்ட நேயத்தையும்

அடு— அடுதலும்

அள்— அள்ளுதலும்

ஓகரது ஏ— யோகிகளினுடைய செயலே யாகும்.

தேரகளோடு— புத்தர்களின் சொற்களையும்

அமணே— சமணர்களின் சொற்களையும்

நினை— நினைத்தலையும்

ஏய்— அவர்களுடன் கூடுதலையும்

ஒழி— ஒழியும்படி செய்து

காவணம் (ஏ)— அந்நெறிகளில் யாம் சேராமல் எம்மைக் காக்கும் தன்மைகள்

உரிவே— உமக்கு உரியனவே யாகும்.

## விளக்கக் குறிப்பு

காழியோயே என்பது '**காழியொயே**' எனவந்தது.

ஏனை—ஏனையது, மற்றையது, பிறிது. அஃது ஈண்டு வெறுப்பைச் சுட்டி வந்தது.

நேம் – நேயம். இடைக்குறை. வெறுப்பை நீக்குதலும், நேயத்தைப் பெருக்குதலும் யோகிகளின் செயல்கள் என்பது கருத்து.

யோகர் என்பது **ஓகர்** என மருவி வந்தது; 'யோக்கிய சத்தி' என்னும் தொடர் 'ஓக்கிய சத்தி' எனச் சில ஞானசித்தி (சுபக்கம் 138) யின்கண் வந்தாற் போல.

தேரர்கள் என்பது **தேரகள்** என நின்றது. அடு-அள்-நினை-ஏய் என்னும் முதனிலைகள், அடுதல் அள்ளுதல் நினைத்தல் ஏய்தல் என்னும் தொழிற்பெயர்ப் பொருளில் வந்தன.

கா + வ(ண்)ணம் – காக்குந் தன்மை; இடைக் குறை. (பந்தலைக் குறிக்கும் **காவணம்** என்பது பிறிதொரு சொல்.) உரியவே என்பது '**உரிவே**' என மருவிற்று. (10)

**நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா**

**காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே**

## இதன் பொருள்

நேர்— நேர்மைக் குணத்தினை

அகழ் ஆம்— அகழ்ந்து கல்லி எறிவது ஆகிய

இதய ஆசு—மனத்தின்கண் எழும் காம வெகுளி மயக்கம் என்னும் முக் குற்றங்களையும்

அழி—அழிக்க வல்லவனே, (அழித்தருள்க என்னுமாம்)

தாய் ஏல்—உலகுக்கெல்லாம் தாயாகும் தன்மையை ஏற்கத் தக்கவன்

நல் நீயே—நல்லவன் ஆகிய நீ ஒருவனேயாம்

நல்—நன்மை புரிவதில்

நீள்—உயர்வு மிக்கவனே

ஆய் உழி கா—தளர்ச்சி நேரும் இடத்து எம்மைக் காத்தருள்க!

காழியுளானின்—சீர்காழிப் பதியிலுள்ள சிவபிரானைப் பற்றிய

நையே—மன உருக்கத்தைத் தரும் இப்பாடல்களை

நினையே—நினைத்துப் பாடவே

தாழ் இசையா—ஒரு குறைவு உண்டாகாது

தமிழ் ஆகரனே—தமிழுக்கு உறைவிடம் போன்ற திருஞான சம்பந்தன் உறுதி கூறுவது இது!

**விளக்கக் குறிப்பு.**

இதய + ஆசு + அழி— **இதயாசழி** என வந்தது.

தாய் + ஏல் + நல் + நீயே—**தாயேனனியே** என அமைந்தது. நீயே! ஏன்பது **நீயே** எனக் குறுகிற்று.

நல் + நீள்— **'னனிள்'** எனப் புணர்ந்து குறுகியது.

ஆய்தல்—தளர்தல், துன்புறுதல்

உழி-இடம், சமயம்

**ஆய் + உழி + கா**— தளர்ந்த இடத்துக் காப்பாற்றுக

நைவு—மன உருக்கம்; பாடல்களுக்குப் பெயராயிற்று.

'காழியுளானின் + நையே + நினையே' என்பது

**காழியுளானினயேனினயே** எனப் புணர்ந்து நின்றது.

தாழ்வு + இசையா— **தாழிசயா** என அமைந்தது.

ஆகரம் – உறைவிடம், நிலைக்களம்

**தமிழாகரன்**— திருஞானசம்பந்தர் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டபடி இத் திருப்பதிகம் ஓதுபவர்க்கு உண்டாகும் பயன் கூறியவாறு. இவ்விறுதிப்பாடலைத் 'திருக்கடைக்காப்பு' என்பர். *(11)*





# " ஒன்றேன்றிரு,
# தெய்வம் உண்டேன்றிரு "

**முன்னுரை :**

" ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு " எனச் சான்றோர்கள் அனைவரும், பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில், அவ்வப்போது தோன்றி அறிவுறுத்தி யுள்ளனர். தெய்வ நம்பிக்கையும், தெய்வச் சிந்தனையும், மக்களை யெல்லாம் உய்வித்து உயர்விக்கும் என்பது, சான்றோர்கள் அனைவரும் தகவுறக் கண்ட துணிவு (1).

இறைவன் ஒருவன் உள்ளமையினைத் தொன்று தொட்டு வாழையடி வாழை என வந்துள்ள சான்றோர்கள் பலரும், ஒவ்வோராற்றால் நம்மனோர்க்குத் தெளிவுறக் கூறி வற்புறுத்தி யுள்ளனர்.

**தொல்காப்பியர் :**

(1) ஆசிரியர் தொல்காப்பியனார் தம் நூலில் " பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனக் காஞ்சித் திணையால் உலக நிலையாமை கூறித் தெய்வந் தெளிவித்தருள்கின்றார். மேலும்,

" வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும் "

எனவரும் நூற்பாவில், **" வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் "** என்னும் தொடரினால், இறைவன் நம்மைப்போல் வினைவயப்பட்டுக் கட்டுப்பட்டு நிற்பவன் அல்லன் ; அவன் பேரறிவு வடிவினன் ; எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் முற்பட்டு முதற்பெரும் பொருளாக விளங்குபவன் ; என்பன போன்ற தெய்வ இலக்கணங்களைப் புலப்படுத்தியுள்ளார். அன்றியும்,

" வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே "

என்னும் நூற்பாவினால், தெய்வ வழிபாடு தேவை என்றும் ; நாம் வழிபடும் தெய்வம் நம்மைப் புறங்காத்து நலம்பல விளைத்தருளும் என்றும் ; அவ்வாற்றால் நாமும் நம்மைச் சார்ந்தோர்களும் பழிதீர் செல்வங்கள் பலபெற்று வழிவழியாக வாழலாம் என்றும் ; பிறவாறும் தொல்காப்பியர் சுட்டியுரைத்திருத்தல் காணலாம்.

**திருவள்ளுவர் :**

(2) தெய்வப் புலவர் **திருவள்ளுவர்,** ' எழுத்தெல்லாம் அகரமுதல' ஆதல் போல, ' உலகு **ஆதிபகவன்** முதற்று ' எனத் தெய்வமுண்மை தேற்றி, அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதனை " வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது " (380) என்று துணிந்து மொழிந்தருள்கின்றார். ஒரு நாட்டின் நலத்திற்கு அரசன் அல்லது தலைவன் ஒருவன் இன்றியமையாமைபோல, உலகின் இயக்கத்திற்கும் ஓர் இறைவன் இன்றியமையாதவனாவான் என்பது திருவள்ளுவர் உணர்த்தும் தெளிந்த முடிவு.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
**இறை** என்று வைக்கப் படும்.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
**தலைமக்கள்** இல்வழி இல்.

என்பன போன்ற திருக்குறள்கள் பலவும், திருவள்ளுவரின் தெய்வங்கொள்கை பற்றிய கருத்துக்களைச் செவ்விதின் உணர்த்தும்.

(1) " The seers of the Upanishads and the Buddha, Plato and Plotinus, Hillal and Philo, Jesus and Paul, the medieval mystics of Islam, ask us **to worship God** in spirit and in truth. By renewing ourselves in this fundamental knowledge we shall find ourselves at home everywhere, citizens of the world, in a very real sense."
—**Dr. S. Radhakrishnan,** "What I Believe"

**இளங்கோவடிகள் :**

(3) செஞ்சொற் காப்பியமாம் சிலப் பதிகாரத்தினை இயற்றியருளிய செந் தமிழ்ச் சான்றோர் ஆகிய இளங்கோவடி கள், அவரவர் செய்த நல்வினை தீவினைகள் அவரவரை யடைந்து பயன் கொடுத்தே தீரும் என்னும் உண்மையினை வற் புறுத்தி, "**ஊழ்வினை** உருத்து வந்து ஊட்டும்" எனக் கட்டுரைத்து, அவ்வாற் ருற் கடவுளுண்மையினை அறிவுறுத்து கின்ருர்.

**சீத்தலைச் சாத்தனுர் :**

(4) அணிமிகச் சிறந்த மணிமேகலை என்னும் அரும்பெறற் காப்பியம் பாடிய **சீத்தலைச் சாத்தனுர்**, நாம் நம் தாய் தந்தையினை அனுமானத்தினுல் மட்டுமே உய்த்துணர்ந்து கொள்ளுகின்ருேம். அதுபோலவே உலகத்திற்கும் ஒரு கடவுள் உண்டு என்பதனை அனுமானப் பிர மாணம் (Inference) கொண்டே கருதி யுணர்ந்து கொள்ளவேண்டும் என்னும் கருத்து அமைய,

> தந்தை தாயரை அனுமா னத்தல்லது
> இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்?

என்னும் வரிகளால் இனிது உணர்த்து கின்ருர்.

**கணியன் பூங்குன்றனுர் :**

(5) நாம் அறியாவண்ணம் நம் முடைய வாழ்க்கையினை உருவாக்கிக் கொண்டு செல்லுகின்ற ஏதோ ஓர் ஆற்றல் உள்ளது (2). முறை பிறழாது செயலாற்றி வருதலின், அப்பேராற்றலை **முறை** என்றே பெயரிட்டு மொழிதலும் தகும். ஒரு தெப்பம் அல்லது புணை யானது தனக்கென ஒரு செயலும் இன்றி, நீர் ஓடும் வழியே தானும் ஓடுதல் போன்றே, ஆருயிர்கள் அனைத்தும் தமக் கென ஒரு செயலும் இன்றித் தெய்வ ஆணை ஆகிய **ஊழ்** என்னும் **முறை** வழிப் பட்டு இயங்கி நிற்கின்றன. ஞானிகள் அனைவரும் தம் ஞானக் காட்சியினுற் கண்டுணர்ந்து, இவ்வுண்மையினையே நமக்கு இனிது விளக்கிப் போந்துள்ள னர் என்று,

> நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்
> காட்சியில் தெளிந்தனம்......"

> புணை—தெப்பம்
> முறை—ஊழ், தெய்வ ஆணை
> திறவோர்—ஞானிகள்
> காட்சி—ஞானக்காட்சி, ஞான நூல்கள்.

எனவரும் புறநானூற்றுப் பாடல் வரி களில், **கணியன் பூங்குன்றனுர்** என்னும் புலவர் பெருமான் நமக்குப் போதித் தருளுகின்ருர்.

**மெய்கண்டசிவம் :**

(6) சைவ சித்தாந்த ஞானப் பேரா சிரியர் ஆகிய **மெய்கண்டசிவம்**, காணப் படும் இவ்வுலகம் அவன் அவள் அது என்னும் பாகுபாடுகள் உடையதாயும், பலவேறு வகைத்தாய்ச் சடமாயும், சுட்டி யறியப் படுவதாயும் இருத்தலின் தோற் றம் நிலை இறுதி என்னும் முத்தொழில் களையுடையதாகும்; எனவே "செய்வோனை இன்றிச் செய்வினை நிகழ்தல் இல்லை" என்னும் அறிவியல் முடிவிற்கு அமையக் காணப்படும் இவ்வுலகம் காணப்படாத கடவுள் ஒருவரை வேண்டியே நிற்கும்; அக்கடவுள் உயிர்களோடு ஒன்ருய் வேருய் உடனுய் நிற்பர்; "காணும் கண் ணுக்குக் காட்டும் உளம்" போல அக் கடவுளே உயிர்களுக்கெல்லாம் காணும் உதவியும் காட்டும் உதவியும் செய்து போதருகின்ருர்; என்பன போன்ற கருத் துக்களைத் தருக்க நெறிமுறைகள் பிற ழாது விளக்கிக் காட்டி, இறைவனுண் மையினை நிறுவுகின்ருர்.

> ஒன்றலா ஒன்ருல் உளதாகி, நின்றவாறு
> ஒன்றலா ஒன்றில்அவை ஈருதல்;
> —ஒன்றலா
> ஈறே முதல்; அதனின் ஈறலா ஒன்று, பல
> வாறே தொழும்பாகும் ஆங்கு

என்று வரும் சிவஞானபோத வெண்பா, இறைவனுலேயே உலகம் முத்தொழிற்

---

(2) "There is a **divinity** that shapes our ends,
Rough-hew them how we will."
—**Shakespeare,** Hamlet.

படுகின்றது என்றும் அதனுல் இறைவனே உலகிற்கு **முதல்வன்** என்றும், உலகிற் பிறந்தும் இறந்தும் உழன்று வரும் உயிர்கள் எல்லாம் பெத்தம் முத்தி என்னும் இருவகை நிலைகளினும் இறைவஞகிய முதல்வனுக்கு அடிமை (தொழும்பு) யாகற்பாலனவேயாம் என்றும், திறம்பட விளக்குதல் காணலாம்.

### அருள்நந்திசிவம்

(7) இவ்வாறே ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர், தாம் இயற்றிய **சிவஞான சித்தியார்** என்னும் சிறந்த சைவ சித்தாந்தப் பெரு நூலில், உலக இயக்கத்திற்குக் காரணமான கடவுள் ஒருவர் உண்டு என்பதனை,

> ஒருவனே டொருத்தி ஒன்றென்
> றுரைத்திடும் உலகம் எல்லாம்
> வருமுறை வந்து, நின்று,
> போவதும் ஆத லாலே,
> தருபவன் ஒருவன் வேண்டும்

என முடிந்த முடிபாக மொழிந்தருள்கின்ருர். மேலும், நம்முடைய உயிரானது **நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம்** (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்னும் ஐந்துவகை அவத்தை நிலைகளை அடையும் இயல்பின; அத்தன்மையானது, அரசன் ஒருவன் தன் படைகளும் பரிசனங்களும் புடைசூழ வெளியே போந்து பவனி செல்லுதலும், பின்னர்த் தன் அரண்மனைக்குத் திரும்பி அந்தப்புரம் புகுதலும் போன்றதாகும்; அவ்வவத்தைகள் முறையே புருவநடு கழுத்து இருதயம் கொப்பூழ் மூலம் என்னும் இடங்களில் நிகழும். அவ்வவத்தைகளில் முறையே 35, 25, 3, 2, 1 என்னும் தத்துவக் கருவிகள் இயங்கி நிற்கும் என்பன போன்ற எத்துணையோ பலயோக ஞான அனுபவச் செய்திகளைக் கூறுகின்ருர்.

> பூதம் ஆனவை காரியங்கள்;
> பொலிந்து மன்னி அழிந்திடும்;
> ஆதலால் ஒரு நாதன் இங்குளன்
> என்று அறிந்துகொள் ஐயனே!

### தாயுமானவர்:

(8) நாம் இறந்து போனுல் நம்முடைய பிணத்தை நான்கு பேர் சுமக்க வேண்டியதாக இருக்கின்றது. ஆனுல் அவ்வளவு பெரிய சுமை மிக்க உடலைச் சுமை தெரியாமல் நாம் எங்ஙனமோ இப்போது சுமந்து வருகின்ருேம். இஃது எத்தனை வியப்பு! இது தெய்வத்தின் செயலே யன்ருே?

> தோற்பாரம் நால் ஆள்
> சுமை ஆகும்; சீவன் ஒன்று இங்கு
> ஆர்ப்பால் எடுத்தது
> எவராலே? பராபரமே!

என வியந்து வினவித், **தாயுமானவர்** நம்மைச் சிந்திக்க வைத்துத் தெய்வமொன்றுண்டு என்னும் மெய்யுணர்வை நமக்கு நல்குகின்ருர்.

இம்மட்டோ! நாம் தாயின் கருப்பப் பையின்கண்ணே குழந்தையாக, முந்நூறு நாட்கள் (பத்து மாதங்கள்) அடைந்து கிடந்து வளர்ந்து வருகின்ருேமே! அப்போது நமக்கு அங்கு உண்ண உணவும், பருகத் தண்ணீரும் உயிர்ப்பதற்குக் காற்றும் கொடுத்துதவிக் காப்பாற்றுபவர்கள் யார்? கடவுள் அல்லரோ? அத்தகைய அருட்பெருங் கடவுளை நாம் நினைத்து உணர்ந்து நன்றி பாராட்டுதற்குக் கடமைப் பட்டிருக்கின்ருேம் அன்ருே? என்கின்ருர் தாயுமானவர்.

> தாயர் கர்ப்பத்தூடு அனமும்
> தண்ணீரும் தந்தருளும்
> நேய! உனை யாரே
> நினையார்? பராபரமே!

### இராமலிங்க அடிகள்:

(9) காற்று என்றும் எங்கும் ஒரு நிலையில் நில்லாத இயல்பை யுடையது. ஓரிடத்திலும் நிலைத்து ஒரு கணமேனும் நில்லாமைதான், காற்றின் சிறப்பியற் பண்பு. இத்தகைய காற்றுப் போன்ற உயிரை எத்துணையோ பல எண்ணிறந்த துளைகளை யுடைய ஓட்டைக் குடம் போன்ற நம்மனேர் உடலின்கண் புகுத்தி, அவ் வுயிர் ஆகிய காற்று ஓடிவிடாமல்

ஒரு குறிப்பிட்ட கால அளவு ஒடுங்கிக் கிடக்கும் வண்ணம், ஒரு பெருஞ் செயற் கருஞ் செயலைச் செய்து வைத்துள்ள மாபெருஞ் **சித்தன்** யாவனோ? **கடவுள்** என்று அல்லாமல் வேறு எவ்வகையில் அச் சித்தனை நாம் குறிப்பிடுவது?

நில்லாத காற்றை
நிலையாக் கடத்தடைத்துச்
செல்லாது வைத்தருளும்
சித்தன் எவன்?

என வினவி, **இராமலிங்க அடிகளார்** தாமும் இறைவன் ஒருவன் உண்மையினை மறுவற நிறுவி யருளுகின்றார்.

**கார்ல் கஸ்டாவ் ஜங்:**

(10) தெய்வ நம்பிக்கையும், தெய்வச் சிந்தனையும் மக்கள் வாழ்க்கைக்கு மிக்க பயன் அளிப்பனவாகும். இவ்வுண்மை யினை உலகப் பேரறிஞர்கள் பலர் இந் நாளில் உணரத் தலைப்பட்டு வருகின்றனர். உலகப் புகழ்பெற்ற மன இயல் நூற் பேராசிரியர் ஆகிய **கார்ல் கஸ்டாவ் ஜங்** என்பவர் குறிப்பிடும் பின்வரும்செய்தியும், நாம் பெரிதும் கருதி யுணர்தற்கு உரியது,

"கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட் டுள்ளனர். யான் எத்துணையோ நூற்றுக் கணக்கான பிணியாளர்களுக்கு மருத்துவம் புரிந்துள்ளேன். அவர்களுள் மிகப்பெரும் பாலோர் புரொட்டஸ்டண்டுகள். ஒரு சிறு பான்மையினர் யூதர்கள். கடவுளை நம்பு கின்ற கத்தோலிக்கர்களோ, ஐந்து அல் லது ஆறு பேர்களுக்கு மேற்படாதவர்கள தான் ஆவர்.

என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில்—அதாவது முப்பத்தைந்து வயதுக்கு மேல்—தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமய வுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை.

அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமய மும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின் பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவு ஆகிய உணர்ச்சியை, அவர்கள் பெருமல் இழந்துவிட்டமையே ஆகும்?

மீண்டும் சமய வுணர்வு கைவரப் பெருமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம் முடைய பிணி தீரப் பெற்றிலர்." (3)

**முடிவுரை:**

இதுகாறும் கூறியவாற்ருல் தெய்வ நம்பிக்கையும், தெய்வசிந்தனையும், மக்கள் வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையா தவை என்பது, வெள்ளிடை விலங்கலாய்த் தெள்ளிதிற் புலனுகும். நாம் அனைவரும் தெய்வ வழிபாட்டில் சிறப்புற ஈடுபட்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுவோமாக! —ஆசிரியர்.

**ஒன்றென் றிரு! தெய்வம் உண்டு**
**என்றிரு!** உயர் செல்வம் எல்லாம்
அன்றென் றிரு! பசித்தோர்
முகம்பார்! நல் அறமும் நட்பும்
நன்றென் றிரு! நடு நீங்காமலே
நமக்கு இட்டபடி
என்றென் றிரு! மனமே! உனக்கே
உபதேசம் இதே —பட்டினத்தார்

---

(3) "During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me, I have treated many hundreds of patients, the large number being Protestants, a smaller number of Jews and not more than five or six **believing** Catholics.

Among all my patients in the second half of life—that is to say, over thirty-five years—there has not been one, whose problem in the **ast resort** was not that of finding a **religious outlook** on life.

It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his **religious outlook.**"

**—Prof. Carl Gustav Jung,**
Modern Man in Search of a Soul, p. 264.

Quoted by

(1) **Dr. S. Radhakrishnan,** Recovery of Faith, p. 37.

(2) **C. A. Coulson F.R.S.,** Science and Christian Belief, p. 110



ஸ்ரீ கால சம்ஹார மூர்த்தி
திருக்கடவூர்

அன்பளிப்பு :

தருமபுர ஆதீனம்

# காலனைக் காலாற் கடிந்த கடவுள்

(கால சம்ஹார மூர்த்தி)

**முன்னுரை :**

உலகம் துன்பம் நிறைந்தது. "துயர் இலங்கும் உலகு" என்பது திருஞான சம்பந்தர் **தேவாரம்.** "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்பது **புறநானூறு.** இங்ஙனம் துன்பமே நிறைந்த உலகியல் வாழ்க்கையில் நாம் எய்தும் துன்பங்கள் எல்லாவற்றிலும் பெரிதும் அஞ்சத்தக்கதும் மிகவும் கொடியதுமாக இருப்பது இறப்புத் துன்பமேயாகும்.

இறப்புத் துன்பம் எத்தகைய கொடுமை வாய்ந்தது என்று சொல்வது எளிதன்று. பிறப்புத் துன்பத்தினைவிட இறப்புத் துன்பமானது, எத்துணையோ மடங்கு மிகவும் கொடுமையானது என்று நூல்கள் கூறுகின்றன.

வந்திடும் மரணத் துன்பம்
மறித்துரை செய்யப் போமோ?
உந்திமேல் ஐயும் பித்தும்
உணர்வொடு பொறி அடங்கி
நந்திடா இருளே மூடி
நாவுலர்ந்து அலமந்து என்னே
இந்தமா இறப்புத் துன்பம்
பவத்துன்பத்து என் மடங்கே!

—சிவப்பிரகாசப் பெருந்திரட்டு.

**தாயுமானவர்**

இறப்புத் துன்பம் ஒன்று உண்டு என்பதை, யாவரும் அவ்வப்போது நினைந்து உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாக இருக்கின்றது. மிகப் பெரிய ஞானிகளும் கூட இறப்பை நினைந்து அஞ்சி இரங்குகின்றனர். இறப்பினை நினைத்தாலே நெஞ்சம் பகீர் என்கின்றது; அவ்வச்சத்தினால் உறக்கமும் வருவதில்லை; இரவிலும் பகலிலும் இதனையே நினைத்து நினைந்து அஞ்சி வருந்துவதினால், எரியிடைப்பட்ட மெழுகைப் போல, உடல் இளைத்து உருகுகின்றனர் ஞானிகள்!

வஞ்ச நமன் வாதனைக்கும்
வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி, உனை அடைந்தேன்
ஐயா! பராபரமே

—பராபரக்கண்ணி

இறப்பொடு பிறப்பை யுள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீர் எனும்;
துயில் உறாது இருவிழியும்;
இரவு பகலாய்ச் செந்தழலின்
மெழுகானது அங்கம்;
இவை என்கொலோ?

—சின்மயானந்தகுரு.

எனத் தாயுமான சுவாமிகள் தாமும் அருளிச்செய் திருத்தல் காணலாம்.

**கம்பர்;**

நாம் ஒவ்வொருவரும் என்றேனும் ஒரு நாள் இறக்கவே போகின்றோம். இறவாமல் ஒருவரும் இருக்கப் போவதில்லை "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு" என்பர் **சுந்தரர்.** "பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் புதுவது அன்று" என்பது சிலப்பதிகாரம். ஆதலின் இறப்பு என்னும் மிகப் பெரிய கொடிய துன்பம் நம் அனைவருக்கும் என்றேனும் ஒருநாள் வந்துறுதல் திண்ணம் என்பதனை, நாம் ஒவ்வொருவரும் மறவாமல் அவ்வப்போது நினைத்து உணர்ந்து நடந்து கொள்ள வேண்டுவது, நம் கடமை. இறப்பு ஒன்று உண்டு என்னும் உண்மையை

மறப்பதனைக் காட்டிலும், மிக்க கேடு வேறொன்றில்லை.

இறப்புஎனும் மெய்ம்மையை
இம்மை யாவர்க்கும்
மறப்புஎனும் அதனின் மேற்
கேடு மற்று உண்டோ?

—அயோத்தியாகாண்டம்

எனக் **கம்பர்**, தசரதனின் கூற்றில் வைத்து இறப்பின் கொடுமையினைப் புலப்படுத்தி யிருக்கின்றார்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமரும் கோயில்;
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே

எனவரும் தேவாரப் பாடலில், திருஞான சம்பந்தப் பெருமான் இறப்புக் காலத்தில் நாம் எய்தும் இடர்ப்பாட்டு நிலையினைக் குறித்தருளியிருத்தல் நம் நெஞ்சிற் பதிக்கற்பாலது.

## ஐயடிகள் காடவர் கோன் :

அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவரும், பல்லவர் குலத்தில் தோன்றியருளிய நல்ல பெருமன்னவரும் ஆகிய ஐயடிகள் காடவர்கோன் என்னும் அருட் பெருஞ் சான்றோர், அல்லல் தருவது எனத் தம் அரசாட்சியினைத் துறந்து அண்டர்பிரான் அமர்ந்தருளும் ஆலயங்கள் பலவும் கண்டு இறைஞ்சிப் பணிந்தார். தாம் சென்று கண்டு பணிந்து மகிழ்ந்த தலங்கள் ஒவ்வொன்றையும் குறித்து, வண்டமிழின் மொழி வெண்பா ஒரொன்றாக வழுத்தினர். அப்பாடல்கள் **க்ஷேத்திரத் திருவெண்பா** என்னும் பெயரில், பதினொன்றாம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளன. அதன்கண் ஒவ்வொரு பாடலிலும் ஐயடிகள் காடவர் கோன், இறப்புத் துன்பத்தின் கொடுமைகளையே எடுத்தோதி இறைவனைப் பணிந்துய்யுமாறு நமக்கு அறிவுறுத்தியருளியிருக்கின்றார்.

"குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கிநுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன், நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை"

ஐ ஆறு—கோழைப் பெருக்கு
வாய் ஆறு — வாய் வழியாக
ஐயாறு — திருவையாற்றில் உள்ள
ஐயாறப்பரை.

"தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்கள் அத்தா என்னுமுன், ஏழைமட
நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை."

## சிதம்பரசுவாமிகள் :

திருப்போரூர்ச் சந்நிதி முறை இயற்றிய சிதம்பரசுவாமிகள் அவர்களைத் தமிழுலகமும் சமயவுலகமும் நன்கறியும். அவர்கள் தம்முடைய நூலின் பாடல் ஒன்றில், இறப்புத் துன்பம் நேரும் வேளையில் நிகழும் இன்னல்களை எடுத்துச் சொல்லி, அத்தகைய இன்னல்கள் ஏதும் நேராமல் தம்மைக் காத்தருளுமாறு திருப்போரூர் முருகன் சந்நிதியிற் பணிந்து முறையிட்டுக் கொள்கின்றார். அப்பாடல் நாம் அனைவரும் கூட நாடோறும் ஓதி இறைவனைப் பணிந்து விண்ணப்பித்துக் கொள்ளத்தக்க சிறப்புடையதாக மிளிர்கின்றது.

நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன்— ஆவியை
ஓர் நொடிக்குள் நீக்கி, எனை ஒண்போரூர்
ஐயா! நின்
சீர் அடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

சிதம்பர சுவாமிகள் வேண்டிக் கொண்டிருத்தல் போல, நாம் நோய்கள் பல உற்று நலியப் பெருமலும், கவலைகள் பல அடைந்து மனம் நொந்து வாடி

வருந்தாமலும், படுத்த படுக்கையாகப் பல நாட்கள் கிடந்து துடித்துப் பரிபவப் படாமலும், நல்லபடியே இன்னல் எதுவும் இன்றி இறைபுணர்வோடும் மன நிறைவோடும் நம் உயிர் நீங்கப் பெறுவதை விரும்புவோமாயின், அப் பேறு குறித்து "அப்போதைக்கு இப் போதே" **காலசம்ஹார மூர்த்தியினைப்** பலகாலும் பணிந்து வழிபடுதல் நலம் பயக்கும்.

**மார்க்கண்டேயர் வரலாறு :**

சிவபெருமான் காலனைக் காலாற் கடிந்து, கால சம்ஹார மூர்த்தி யாகத் தோன்றி **மார்க்கண்டேயர்** என்னும் முனிவருக்கு அருள் செய்தார். அவர் வரலாறு பின்வருமாறு: முன்னொரு காலத்தில் **குச்சகர்** என்னும் முனிவர் **கடகம்** என்னும் நகரத்தில் வசித்து வந்தார். அவருக்குக் **கவுச்சிகர்** என்னும் ஒரு புதல்வர் இருந்தார். இளமையிலேயே அவர் கொண்டிருந்த தவவொழுக்கம் கண்டு வியந்து, திருமால் அவருக்கு **மிருகண்டுயன்** எனச் சிறப்புப் பெயர் அளித்துப் பாராட்டி வாழ்த்திச் சென்றார். பின்னர் அவர் தம் தந்தையின் விருப்பப்படி, **அகாமயம்** என்னும் வனத்தில் வாழ்ந்து வந்த **உசத்தியர்** என்னும் முனிவரின் புதல்வியாகிய **விருத்தை** என்பவளை மணந்து கொண்டு வாழ்ந்து வரலாயினர். இருவருக்கும் **மிருகண்டு** என்னும் புதல்வர் தோன்றினார். அவர் திருமணப் பருவம் அடைந்ததும், **முற்கல முனிவர்** புதல்வி **மருத்துவதி** என்பவளை மணந்து கொண்டார்.

மிருகண்டு முனிவருக்கும், மருத்துவதி அம்மைக்கும் திருமணம் ஆகி நெடுநாள் கழிந்தும், மகப்பேறு வாய்க்கவில்லை. ஆதலின் மிருகண்டு காசிக்குச் சென்று சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். சிவபெருமான் வெளிப்பட்டு, பதினாறு வயதுடைய நன்மகன் ஒருவன் நினக்குத் தோன்றுவான் எனக் கூறி மறைந்தார். அவ்வாறே மருத்துவதியம்மை கருவுயிர்த்து, பங்குனி மாதமும் ரேவதி நட்சத்திரமும் பொருந்த, மிதுன லக்நம் கழிந்து கடக லக்நம் வர, சுக்கிரனும் குருவும் தமக்குரிய உச்சராசிகளிலும், செவ்வாய் புதன் சனி ராகு கேதுக்கள் ஆகியோர் தத்தமக்குரிய சிறந்த இடங்களிலும் நிலைகளிலும் அமர, சூரியனும் சந்திரனும் மீனராசியில் கூடியிருந்த ஒரு நல்ல நாளில், ஒப்புயர்வற்ற ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தனர். பிரமதேவர் தோன்றி, அக்குழந்தைக்கு **மார்க்கண்டேயர்** என்று பெயரிட்டுச் சென்றார்.

குழந்தை வளர்ந்து, ஐந்து வயது நிரம்பியது. கலைகள் பயிலத் தொடங்கியது. வேதாகம நூல்களை யெல்லாம் மிக விரைவிற் கற்றுத் தேர்ந்தது. சிவம் முயன்று அடையும் தெய்வக் கலைபல ஓதிய அத் தெய்வச் சிறுவன், சிவபக்தியிலும் சிவ வழிபாட்டிலும் சிறந்து விளங்கினான். தாய் தந்தையர்கள் ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்து இன்புற்றனர். ஆயினும் சிறுவனுக்கு வயது ஏற ஏறத் தாய் தந்தையர்கள் கவலை கொள்ளத் தொடங்கினர். கவலையின் காரணத்தைத் தந்தைதாயர்பால் வற்புறுத்திக் கேட்டுத் தெரிந்துகொண்டான் மைந்தன்.

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"

என்னும் உண்மையினை யுணர்ந்தான். தவத்தினால் அடைய முடியாததும் ஒன்றுண்டோ? தவம் செய்து இறையருள் துணைகொண்டு, தாய் தந்தையரின் கவலையைப் போக்க மார்க்கண்டேயன் துணிவுகொண்டான்.

காசியம் பதிக்குச் சென்றான். அங்கே மணிகர்ணிகை என்னும் புனித இடத்தை அடைந்தான். சிவபிரானை நோக்கித் தவம் புரிந்தான். சிவபிரான் காட்சி தந்து, "தெற்கே தமிழ் நாட்டில் உள்ள திருக்கடவூர் என்னும் தலத்தை அடைந்து எம்மை வழிபட்டுக் கொண்டிரு. நினக்கு எமபயம் நேராது" என்று கூறி மறைந்தார்.

அவ்வாறே மார்க்கண்டேயர் திருக்கடவூர் என்னும் சிவதலத்தை அடைந்து,

சிவபிரானை முறைப்படி வழிபட்டுக் கொண்டிருந்தார். பதினாறும் ஆண்டு தொடங்கி, அது நிறைவு பெறும் காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்நிலையிற் காலதூதன் ஒருவன் இவர்தம் உயிரை வவ்விச் செல்ல வந்தான். அவனால் இவரை அணுகவும் முடியவில்லை. திரும்பிச் சென்று, காலனிடம் செய்தியைக் கூறினான்.

காலன் சீற்றங் கொண்டு, தன் கணக்கர்களாகிய **சித்திரன், குத்திரன்** என்பவர்களை அழைத்து, மார்க்கண்டேயரின் ஆயுள்பற்றிய கணக்கினை உசாவினான். பதினாறு வயது நிறைவுற்றமை அறிந்து, மறுமுறையும் ஏவலர்களை அனுப்பிப் பார்த்தான். அவர்களும் வறிதே திரும்பினர். அது கண்ட கூற்றுவன் மிக்க சீற்றங் கொண்டான். பாசம் தண்டம் சூலம் மழு முதலிய படைகளை ஏந்திக் கொண்டு, எருமையூர்தியின் மீது ஏறிப் புறப்பட்டான். திருக்கடவூர் சென்று, மார்க்கண்டேயர் எதிரில் நின்று அச்சுறுத்தி அதட்டி அழைத்தான். அவரோ சிவபிரானைத் தியானித்துக் கொண்டு, சிவலிங்கத் திருவுருவினைச் சிக்கெனக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அந்நிலையிற் கூற்றுவன் தன் பாசக் கயிற்றினை எடுத்து வீசி, மார்க்கண்டேயரையும், அவர் தழுவியிருந்த சிவலிங்கத்தையும் ஒருசேரப் பற்றி ஈர்க்க முற்பட்டான். அவனது செருக்கும் அகந்தையும் கண்ட சிவபெருமான், சிவலிங்கத் திருமேனியினின்று வெளிப்பட்டுத் தமது இடது திருவடியினால், சிறிதே எற்றி உதைத்தார். இங்ஙனம் சிறிதே எற்றி உதைத்த அளவில், கூற்றுவன் கீழே விழுந்து இறந்தொழிந்தான். மார்க்கண்டேயர் என்றும் பதினாறு வயது உடையவராய், இறவாமல் இருக்கும் இன்பப்பேறு பெற்றார். இறைவன் பின்னர்த் தேவர்களின் வேண்டுகோளின் படி, கூற்றுவனை உயிர்பெற்றெழச்செய்து, 'இனி எம்முடைய அடியவர்கள் பக்கலில், நீ அணுகுதலும் செய்யாது அஞ்சி நடந்து கொள்க! உய்ந்து செல்க' என விடை கொடுத்தார். அதுமுதல் மார்க்கண்டேயரை மட்டுமே யன்றி, அவர்தம் வரலாறு கேட்டு மகிழும் அடியவர்களையும் கூட, நெருங்குதற்குக் கூற்றுவன் அஞ்சி வருகின்றான்.

> கொல்நவில் அடுபடைக் கூற்றன், பண்டு போல்
> இன்னமும் விளைகுவது என்கொலோ? என,
> மன்னருள் பெற்ற மார்க்கண்டன் மாக்கதை
> பன்னினர் முன்னரும் படர்தற்கு அஞ்சுவான்

மார்க்கண்டேயரின் வரலாற்றினைக் காசிப முனிவர், தமக்கும் மாயை என்னும் அரக்கிக்கும் மக்களாகப் பிறந்த **சூரபதுமன், சிங்கமுகன், தாரகாசுரன்** என்னும் அசுரர்களுக்குத் தவ ஆற்றலின் மாண்பினை யுணர்த்தக் கூறினர் என்று கந்தபுராணம் கூறுகின்றது.

## சுவேதன்

மார்க்கண்டேயர் பொருட்டு இங்ஙனம் சிவபெருமான் கால சம்ஹார மூர்த்தியாகத் தோன்றியருளியதே யன்றி, **சுவேதன்** என்னும் ஓர் அரச முனிவன் பொருட்டும், காலனைக் காலாற் கடிந்தருளிய ஒரு வரலாறும் நூல்களிற் காணப்படுகின்றது.

> தகும்செயல் உடைய நம் சுவேதன் தன்னை முன்
> இகழ்ந்தனன் மறலி; எம்மால் எரிந்தனன்;
> புகன்றிடின் இன்னும்நம் பொருவில் தொண்டரால்
> உகுந்திறல் உடையவர் உளர் அநேகரே
>
> —சித்தாந்த சிகாமணி,
> சிவப்பிரகாசர்

சுவேதன் என்பவன் தன் மனைவி **சுலோசனை** என்பவளுடன் வாழ்ந்து வருங்கால், தான் அரிதிற் பெற்றெடுத்த **வாதாபி** என்னும் மைந்தனை இழந்ததனால், மிகவும் மனம் வருந்தி, வாழ்க்கையில் வெறுப்புற்றுக் **காளாஞ்சனம்** என்னும் புண்ணிய தீர்த்தக் கரையில் சிவபிரானை வழிபட்டு வந்தான். அவனது ஆயுள்

முடிவில், கூற்றுவன் அவன் உயிரைக் கவர்ந்து செல்லப் போந்தான். அந்நிலையில் தன் உண்மை யடியவனுகிய சுவேதன் பொருட்டுச் சிவபெருமான் வெளிப்பட்டுக் காலசம்ஹாரம் செய்தனர் என நூல்கள் கூறுகின்றன. இவ் வருள் நிகழ்ச்சி, **திருவெண்காடு** என்னும் தலத்தில் நிகழ்ந்தது என வால்மீகி இராமாயணம் முதலிய நூல்கள் கூறக் காண்கின்ருேம்.

**திருவள்ளுவர் :**

கால சம்ஹார மூர்த்தியின் பெருமையினைத் தேவாரத் திருமுறைகளில் நம்முடைய சமயாசிரியர்கள், எத்துணையோ பல பாடல்களிற் குறிப்பிட்டு விதந்தெடுந்து வியந்து போற்றியுள்ளனர். தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானும் கூட, மிகவும் வியந்து போற்றிக் குறிப்பிட்டருளியுள்ளார்.

கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

என்பது **திருக்குறள்.** சமயப் பொது நோக்கம் கொண்டவர் எனப்படும் திருவள்ளுவர் தாமே, சிறந்தெடுத்துத் திறந்தெரிந்து குறிப்பிட்டுப் போற்றினர் எனின், காலசம்ஹார மூர்த்தியின் பெருமையைக் கட்டுரைத்தல் எளியதோ?

**கம்பர் :**

காலசம்ஹார மூர்த்தியின் மேன்மையிற் சிறந்த மேன்மை வேறென்றில்லை என்று, கம்ப நாடரும் தமது இராம காதையின்கண் இராம பிரானின் வாய்மொழி வாயிலாகச் சிறந்தெடுத்துக் கூறிப் போற்றி மகிழ்கின்ருர்.

நஞ்சினை மிடற்று வைத்த
நகைமழு வாளன் நாளும்
தஞ்சென முன்னம் தானே
தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினேன் அபயம் என்ற
அந்தணற் காக அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை யுண்டோ?

**தாயுமானவர் :**

"இறப்பொடு பிறப்பை எண்ணினுல் நெஞ்சம் பகீர் எனும்; இருவிழியும் துயிலுருது; எரியிடை மெழுகு போல உடல் இளைத்து இரவு பகல் உருகும்" எனக் கூறும் தாயுமானவர், "இனி எனக்குப் பயம் இல்லை. அன்பர்களும் பயப்பட வேண்டா, மார்க்கண்டேயர் உயிரைக் கவரவந்த மறலி (எமன்) என்ன பாடு பட்டான் என்பதை நினைத்துப் பார்த்தால் நமக்குப் பயமும் உண்டாகுமோ? என்று துணிவுகொண்டு பாடுகின்ருர்.

மார்க்கண்டர்க் காக அன்று
மறலிபட்ட பாட்டை, உன்னிப்
பார்க்கின், அன்பர்க்கு என்ன
பயங்காண்? பராபரமே

**முடிவுரை :**

இத்தகைய சிறப்பு வாய்ந்த கால சம்ஹார மூர்த்தியை அன்புடன் தொழுது வழிபட்டு, நாமும் எல்லா நலங்களும் பெறுவோமாக! காலனிடமிருந்து மார்க்கண்டேயர் ஆகிய பாலனை முன்பு காத்தருளிய கண்ணுதற் கடவுள், இன்று வஞ்சக நெஞ்சம் கொண்டு நம்மை எதிர்க்கத் தலைப்பட்டுள்ள கொடிய சூழ்ச்சி மிக்க பகைவர்களிடமிருந்தும், நம் **இந்தியத்தாய்த் திருநாட்டை**-பழம்பெரும் **பாரத தேசத்தைப்** பாதுகாத்து, உலக அமைதியையும் நலத்தினையும் வளர்த்து நீடினிதோங்கி நிலவச் செய்தருள்வாராக! என்று, நாம் அனைவரும் நம் மனமொழி மெய்களால் துதித்து வணங்குவோமாக!

—ஆசிரியர்


---

## செய்திச் சுருக்கம்

சென்னை மயிலைக் கபாலீசுவரர் கோயில் தேவார பாடசாலையில், சைவசித்தாந்த மகாசமாஜச் சார்பில் "சைவசித்தாந்தத்தில் கன்மம் பற்றிய கொள்கை" என்பது குறித்த ஓர் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெற்றது. டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனுபதி, M. A. Ph. D. அவர்கள் தலைமை தாங்கினர்கள். திரு. கோ. முத்துசாமி பிள்ளை, (I. A. S.) அவர்கள் கருத்தரங்கைத் தொடக்கிவைத்தார்கள். திருவாளர்கள் சி. என். சிங்காரவேலு முதலியார், M. A., புலவர். ந. ரா. முருகவேள், M. A. M. O. L., இராவ்சாகிப் கல். முருகேச முதலியார், B. A. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திரு. டாக்டர் பா. நடராஜன், M. A., D. Litt. அவர்கள் பார்வை யாளராக வந்திருந்து, தாமும் தம்முடைய கருத்துக்களைக் கூறி மகிழ்வித்தார்கள். சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் போன்ற பெருமக்கள் பலரும் வந்திருந்து, அவைக்குச் சிறப்பளித்தனர்.

# சித்திர கவிச் சித்திரம்

திருஞானசம்பந்தர்
திருவெழுகூற்றிருக்கை.




சித்திரம் வரைந்து
உதவியவர்,
திரு. எம். பிரமானந்தா,
சிவகங்கை.

# திருவெழு கூற்றிருக்கை

(சித்திர விளக்கம்)

[திருவெழு கூற்றிருக்கை என்பது திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்களுள் ஒன்று. இஃது இணைக்குறள் ஆசிரியப் பாவால் இயன்ற ஓரே பாடல் ஆயினும் மரபு பற்றிப் பதிகம் என வழங்கப்படும். இதன்கண் சிவபிரானின் பலவகைப் பண்புகளும் சிறப்புகளும், இனிது தொகுக்கப் பெற்று. முன்னிலைப் படுத்திப் போற்றப் பட்டுள்ளன.

சித்திரகவி வகையினைச் சேர்ந்த திருவெழு கூற்றிருக்கை என்னும் இவ் வழகிய இனிய திருப்பதிகம், எண் அலங்காரம் அமையும்படி ஒன்று முதல் ஏழு ஈறாகப் படிமுறையே ஏறியும் இறங்கியும் மாறி மாறி வர இனிது பாடப் பெற்றிருத்தலின், **ஏழு + கூறு + இருக்கை** (திருவெழு கூற்றிருக்கை) எனப் பெயர் பெறுவதாயிற்று.

இங்ஙனமே பதினொன்றும் திருமுறையில் நக்கீரதேவ நாயனாரும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும், திருவெழு கூற்றிருக்கைச் செய்யுட்கள் பாடியிருக்கின்றனர். யாப்பருங்கல விருத்தி. மாறன் அலங்காரம் முதலிய நூல்களில் இச் சித்திர கவிக்குரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

திருவெழு கூற்றிருக்கையின் தெளிவான பொருள் விளக்கம், நமது "**திருக்கோயில்**" மாலை 6: மணி 6: ஆம் இதழில் 265—270 பக்கங்களில், ஆசிரியக் கட்டுரையாக எளிய இனிய முறையிற் செவ்விதிற் செய்யப் பெற்றுள்ளது. அதற்குரிய சித்திர அமைப்பும், நமது அன்பியற் பெருந்தகை ஆகிய **அறநிலைய ஆணையர்** அவர்களின் இசைவு பெற்றுத் தனியே செய்து, இப்போது இங்கு வெளியிடப் பெறுகின்றது.

இஃது இங்குத் தேர் போன்ற அமைப்பில், ஒரு பகுதியிலேயே முடிந்து நிறைவுற்றுவிட்டு இருப்பதனையே, மீட்டும் திருப்பி மற்றொரு பகுதியாக அமைத்து இரண்டு பகுதிகளாக வரையப் பெற்றிருக்கின்றது. தேர் போன்று சித்திரம் வரைய வேண்டும் என்னும் **பக்தியுணர்வு** காரணமாக இங்ஙனம் செய்யப்பட்டிருப்பினும், இதன்கண் ஏழுகூறுக அமைந்துள்ள ஏதேனும் ஒருபகுதியே பாடலின் அமைப்பிற்குப் போதியதாகும்.

ஏழுகூறுகளாக அமைந்துள்ள படிநிலைக் கட்டங்களில் உள்ள ஒவ்வோர் அறையினில் பொறிக்கப் பெற்றிருக்கும் **ஒன்று இரண்டு மூன்று** முதலிய எண்களுக்கு ஏற்ப, அவ்வெண் வருகின்ற தொடர்கள் பாடலிலும் ஆங்காங்கே வந்திருத்தல் காணலாம். அத்தொடர் அமைப்புகளைத் தெளிவுறத் தெரிந்து கொள்வதற்காக, அவைகள் பின்வருமாறு தனித்தனியே பிரித்துக் காட்டி இங்குப் பதிப்பிடப் பெறுகின்றன.

—ஆசிரியர்]

1. ஒருருவாயினை மானுங்காரத்து
2. ஈரியல்பாய்
1. ஒருவின் முதல் பூதலம் (1)

1. ஒன்றிய
2. இருசுடரும்பர்கள் பிறவும் படைத்தளித்தழிப்ப
3. மும்மூர்த்திக ளாயினை
2. இருவரோடு
1. ஒருவனாகி நின்றனை (2)

1. ஓரால் நீழலொண்கழல்
2. இரண்டும்
3. முப்பொழுதேத்திய
4. நால்வர்க்கொளி நெறிகாட்டினைநாட்டம்
3. மூன்றுகக் கோட்டினை
2. இருநதியரவமோடு
1. ஒருமதி சூடினை (3)

1. ஒருதாள்
2. ஈரயில்
3. மூவிலைச் சூலம்
4. நாற்கான் மான்மறி
5. ஐந்தலை யரவமேற்றனை காய்ந்த
4. நால்வாய்
3. மும்மதத்து
2. இருகோட்டு
1. ஒருகரி யீடழித்துரித்தனை (4)

1. ஒருதனு
2. இருகால்வளையவாங்கி
3. முப்புரத்தோடு
4. நானிலம்
5. அஞ்சக் கொன்று தலத்துற அவுணரை
6. அறுத்தனை
5. ஐம்புலன்
4. நாலாம் அந்தக்கரணம்
3. முக்குணம்
2. இருவளி
1. ஒருங்கியவாணேரேத்தநின்றனை (5)

1. ஒருங்கியமனத்தோடு
2. இருபிறப்போர்ந்து
3. முப்பொழுது குறைமுடிந்து
4. நான்மறையோதி
5. ஐவகை வேள்வியமைத்து
6. ஆறங்கமுதலெழுத்தோதி வரன்முறை பயின்று
7. எழுவான்றனைவளர்க்கும் பிரமபுரம் பேணினை
6. அறுபதமுதலும் வேணுபுரம் விரும்பினை யிகலிய
5. மைந்துணர்புகலியமர்ந்தனை பொங்கு
4. நாற்கடல் சூழ்வெங்குருவிளங்கினை பாணி
3. மூவுலகும்புதைய மேன்மிதந்த தோணி புரத்துறைந்தனை தொலையா
2. இருநிதிவாய்ந்த பூந்தராயேய்ந்தனை
1. ஒருபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை (6)

1. ஒருமலையெடுத்த
2. இருதிறல்அரக்கன்விறல் கெடுத்தருளினை புறவம் புரந்தனை
3. முந்நீர்த்துயின்றோன்
4. நான்முகனறியாப் பண்பொடு நின்றனை சண்பையமர்ந்தனை
5. ஐயுறுமமணரும்
6. அறுவகைத்தேரரு மூழியுமுணராக் காழி யமர்ந்தனை யெச்சம்
7. ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
6. ஆறுபதமும்
5. ஐந்தமர் கல்வியும் மறைமுதல்
4. நான்கும்
3. மூன்றுகாலமும்தோன்ற நின்றனை
2. இருமையின்
1. ஒருமையும் (7)

ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்;
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே!

—திருஞானசம்பந்தர்

---

## கோயில் நிகழ்ச்சிகள்

1. சென்னை ஸ்ரீபைராகிமடம் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோயில் பிரம்மோற்சவம், 25-9-65—6-10-65.
2. நாகை வெளிப்பாளையம் அகத்தீசுவரசுவாமி கோயில் நவராத்திரி விழா.
3. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் ,, ,,
4. திருவெண்காடு சுவேதாரண்யேசுவரசுவாமி கோயில் ,, ,,
5. சுந்தரப்பெருமாள் கோயில் சௌந்தரராஜப் பெருமாள் ,, ,,
6. சென்னை சென்னமல்லீசுவரர், சென்னகேசவப் பெருமாள் கோயில்கள் ,, ,,
7. திருவண்ணாமலை ஏகாம்பரேசுவரர் கோயில் ,, ,,
8. சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் ,, ,,
9. கிருஷ்ணராயபுரம் திருக்கணமால் ஈசுவரசுவாமி ,, ,,

# மதிப்புரை

(1) **இதயக் கோயில் :** இஃது ஒரு சிறந்த கவிதை நூல். இதன்கண் ஐம்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள்,

> " இதயப் பதும பீடம் அதனில்
> இறையாம் சுடரைக் காணில்
> உதயம் ஆகும் ஞானம் ! — அதனில்
> ஒலிக்கும் தேவ கானம் "

என்னும் உண்மையினை வற்புறுத்தும் இதயக்கோயில் என்னும் தலைப்புடைய கவிதை, முதற்கண் அமைந்திருத்தலால், அக்கவிதையின் தலைப்பே நூலுக்கும் அமைக்கப் பெற்று விளங்குகின்றது. இசைக் கனிகள், தமிழிசைப் பாடல்கள், கீதமலர், ஆத்மாஞ்சலி, வடபழநி முருகன் பாமலர், திருமயிலைப் பாமாலை, அங்கயற் கண்ணி அஞ்சலி முதலிய பல இசைப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் இயற்றி முன்னரே மிகவும் புகழ் பெற்றிருக்கும் சிறந்த கவிஞரான **திரு என். எஸ். சிதம்பரம்** அவர்கள், இந் நூலின் ஆசிரியர் ஆவார். வெவ்வேறு பல சிறந்த இதழ்களில் அவ்வப்போது வெளிவந்தவையும், வானொலியில் ஒலிபரப்பப் பெற்றவையும் ஆகிய கவிதைகள், இந்நூலில் ஒருங்கே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. எளிமையும் இனிமையும் வாய்ந்து, பற்பல அழகிய தலைப்புக்களிற் சிறப்புற அமைந்துள்ள இக்கவிதைகள் ஆசிரியரின் பக்தியுணர்வையும், சமரச உள்ளத்தினையும், பண்பட்ட சிந்தனைத் திறனையும் செவ்வி தின் விளக்குகின்றன. **விலை** : ரூபா 1-75.

**கிடைக்குமிடம்** : கிராமஜோதி நூலகம், 16, இராமகிருஷ்ண மடத்துச் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

(2) **ஸ்ரீநவக்கிரக நல்லஞ்சலி :** நவக்கிரகங்களைப் பக்தியுடன் வழிபட்டு நலம் பெற விரும்புவோர்க்குப் பயன்படும் பொருட்டு, இத் துதிஇசை நூல் இயற்றப் பெற்றுள்ளது. இதனையும் **திரு என். எஸ். சிதம்பரம்** அவர்களே இயற்றியுள்ளார். நவக்கிரகங்களின் நலங்களும், பல வகைப் பண்புகளும் இதன்கண் நன்கினிது விளக்கப் பெற்றுள்ளன. இந் நூலில் வரும் இசைப் பாடல்களுக்குச் சுரக்குறிப்பும் செம்மையுற அமைத்துத் தரப் பெற்றிருக்கின்றது. பக்தர்களுக்குப் பயன்படத் தக்க, சிறந்த நூல் ! **விலை** : 75 காசுகள்.

**கிடைக்குமிடம்** : தி இன்டியன் மியூசிக் பப்ளிஷிங் அவுஸ், 4, பந்தர் தெரு, சென்னை-1

(3) **ஸ்ரீகுணரத்ந கோஸம் :** கூரத்தாழ்வான் திருக்குமாரரும், எம்பாருடைய நன்மாணவரும், எம்பெருமானார் என்னும் ஸ்ரீஇராமானுஜரின் திருவருளைப் பெற்றவரும் ஆகிய **ஸ்ரீபராசரபட்டர்** என்னும் வைஷ்ணவப் பெரியார், தாம் பெரிய பெருமாள் விஷயமாய் **ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்** என்னும் நூலை அருளிச் செய்தது போலவே, நாச்சியார் விஷயமாய் வடமொழியில் அருளிச் செய்திருக்கும் நூல் **ஸ்ரீகுணரத்நகோஸம்** என்பது. பிராட்டியின் பலவகைப் பெருமைகளையும் எடுத்துரைத்து விளக்கித் துதிக்கும் நூல் இது ! பிராட்டி இறைவனிலும் சிறந்தவள். குற்றங் கண்டாற் சீறுபவன் இறைவன் ; தன் புருஷகாரத்தாற் குற்றங்களைப் பொறுப்பிக்கும் இயல்பினள் பிராட்டி. ஏற்றம் பெறுபவன் இறைவன் ; ஏற்றமாய் இருப்பவள் பிராட்டி. பிராட்டியின் நித்திய சம்பந்தமே பரம புருஷனுடைய சிறப்பியல்பு ; அதுவே அவனுடைய பெருமைக்கு அடிப்படை என்பனபோன்ற அரும்பெருங் கருத்துக்கள் இந்நூலில் விளக்கப் பெறுகின்றன. இத்தகைய சிறந்த இவ் வடமொழி நூலை, ஆழ்வார் திருநகரி ஸ்ரீ உ. வே. திருமலை நல்லான்

சக்கரவர்த்தி இராமகிருஷ்ண ஐயங்கார் சுவாமிகள், தமிழில் அறுபத்தொரு செய்யுட்களாக மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். வடமொழி மூல சுலோகங்கள் தமிழில் தக்க குறியீடுகளுடன் தரப் பெற்றிருக்கின்றன. தமிழ்ச் செய்யுட்கள் மொழி பெயர்ப்பு என்று தோன்ருமல் இயல்பாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கின்றன. பதவுரை, கருத்துரை, சிறப்புரை, தடைவிடைகள், இலக்கணக் குறிப்புக்கள், அணியியல் விளக்கங்கள் முதலியனபலவும் கொடுக்கப்பட்டுள்ளன. பயன்மிக்க சிறந்த பெருநூல்! ஆசிரியரின் புலமை நலம் வியந்து போற்றுதற்குரியது. விலை; ரூபா 2-50.

(4) **சதுச்லோகியும் ஸ்ரீஸ்தவமும்:** வைஷ்ணவ சமயத்திற்குப் பரமாசார்யர் ஆகிய **ஆளவந்தார்** அருளிய நூல் **சதுச்லோகி** என்பது. நான்கு சுலோகங்களால் இயன்றதாதலின், இந் நூல் இப் பெயர்த்தாயிற்று. பிராட்டியானவள் நித்திய விபூதி லீலாவிபூதி என்னும் உபய விபூதிகளுக்கும் தலைமையுரிமை யுடையவள்; பிராட்டியின் இனிய பெருமை எல்லையற்றது; உலகை வாழ்விக்கும் அருள் நோக்கம் உடையவள் அவள்; அவளது துணையின்றி நாம் பயன்பெறல் இயலாது; பிராட்டியின் இயல்பனைத்தும் இறைவனின் இயல்புகளோடு ஒன்றியுள்ளன என்று, இந்நூல் இனிது விளக்குகின்றது. **ஸ்ரீஸ்தவம்** என்பது ஆளவந்தார் அருளிய சதுச்லோகியைத் தழுவி அடியொற்றிக் **கூரத்தாழ்வார்** இயற்றியது. திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்து நாடோறும் ஸ்ரீரங்க நாச்சியாரை வழிபட்டு மகிழ்ந்த தமது அனுபவம் பொங்கி எழுந்து மடைபாய, இதனைக் கூரத்தாழ்வார் அருளிச் செய்துள்ளார். 'திருமகளைப் பற்றிய துதி நூல்' என்பது இதன் பொருள். இவ்விரு நூல்களும் வைஷ்ணவத்தின் இரு சாராரும் போற்றி இன்புறும் மாட்சிமையுடையது. வடமொழியிலுள்ள இவற்றைத் திருமலை நல்லான் சக்கரவர்த்தி இராமகிருஷ்ண ஐயங்கார் சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்து, உரைவிளக்கங்களுடன் இந்நூலில் வெளியிட்டுள்ளார்.

இதன் விலை: ரூபா **ஒன்று.**

(5) **ஸ்ரீஸ்துதி:** கவி தார்க்கிக கேஸரியும், வேதாந்தாசார்ய வர்யரும் ஆகிய ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகர் அருளிய நூல் இது. 25 சுலோகங்கள் கொண்டது. திருவின் தத்துவத்தைத் தெளிய உணர்த்துவது. ஆளவந்தார் அருளிய சதுச்லோகி, கூரத்தாழ்வார் இயற்றிய ஸ்ரீஸ்தவம், பராசர பட்டர் பாடிய ஸ்ரீகுணரத்நகோசம் என்னும் நூல்கள் முறையே **சூத்திரம், வார்த்திகம், பாஷ்யம்** என்னும் நிலையில் அமைந்திருக்க, இந்நூலோ அவைகளின் பொருள் நலங்களையெல்லாம் பொதிந்துகொண்டு, மிகச் சுருக்கமோ மிக விரிவோ இன்றி ஏற்றம் பெற்றிஇனிது அமைந்து விளங்குகின்றது. வடமொழியில் உள்ள இந் நூலையும் தமிழில்செய்யுட்களாக மொழிபெயர்த்து, பதவுரை, கருத்துரை, சிறப்புரை முதலிய சிறந்த விளக்கங்களுடன் தந்துள்ளார்.

இதன் விலை: ரூபா **இரண்டு**

இம்மூன்று நூல்களும் முறையே 1954, 1956, 1965ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. இவைகள் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் ஈடுபாடு கொண்டவர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறத் தக்க சிறந்த நூல்கள். **கிடைக்குமிடம்:** 29, பெருமாள்முதலி தெரு, சௌகார் பேட்டை, சென்னை-1,

—ஆசிரியர்.

## அறநிலையங்களின் சார்பில் நடைபெறும்

# கல்வி நிலையங்கள்

[சமயம் என்பது சமுதாயத்தோடு மிகவும் தொடர்புடையது; ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமேயன்றிச் சமுதாய நல வளர்ச்சிக்கும் சமயம் பெரிதும் துணைபுரிகின்றது. ஆதலின் நமது சமய அறநிலையங்கள், சமுதாய நல வளர்ச்சி குறித்துப் பல நல்ல அறப்பணிகளைச் செய்து வருகின்றன! ஆயினும் நமது அறநிலையங்கள் ஆற்றிவரும் நல்ல அறப்பணிகள், நம்மிற் பலருக்கே தெரிவதில்லை. எனவே, "அறநிலையங்கள் புரிந்து வரும் அரிய பெரிய பணிகளை, அனைவரும் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. அதனால் அறநிலையப் பணிகள் மேலும் ஆக்கம் பெறுவதுடன், பொது மக்களும் பலவகைகளிற் பயன் அடைதல் இயலும்" என நம் ஆணையர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபடி, இவ்விதழில் அறநிலையங்களின் கல்விப் பணியைப் பற்றிய விவரம் தரப் பெறுகின்றது.

—ஆசிரியர்]

### கல்லூரிகள்

1. கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி, பழநி—ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், —மதுரை மாவட்டம்
2. கலைக்கல்லூரி, பழநி—ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்—மதுரை மாவட்டம்.
3. நாதசுரப் பயிற்சிக் கல்லூரி, பழநி— ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்— —மதுரை மாவட்டம்
4. சம்ஸ்கிருத - தமிழ்—கல்லூரி, இராமேசுவரம்— இராமநாதசுவாமி தேவஸ்தானம்— இராமநாதபுரம் மாவட்டம்.
5. பூம்புகார்க் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி, மேலையூர்— தஞ்சை மாவட்ட அறநிலையங்களின் சார்பில் —தஞ்சை மாவட்டம்.
6. ஸ்ரீ பராசக்தி பெண்கள் கலைக்கல்லூரி, திருக்குற்றாலம் —திருக்குற்றால நாதசுவாமி தேவஸ்தானம்—திருநெல்வேலி மாவட்டம்.
7. ஸ்ரீ தேவிகுமாரி பெண்கள் கலைக்கல்லூரி, குழித்துறை— அனைத்து அறநிலையங்களின் சார்பிலும்—கன்னியாகுமரி மாவட்டம்.
8. மணலி தமிழ்க்கல்லூரி, சென்னை —மணலி இலக்குமண முதலியார் அறக்கட்டளைகளின் தனிப்பொறுப்பில்— சென்னை மாவட்டம்.

### உயர்நிலைப் பள்ளிகள்:

1. ஸ்ரீ காந்திமதி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருநெல்வேலி— நெல்லையப்ப சுவாமி தேவஸ்தானம்—திருநெல்வேலி மாவட்டம்
2. பண்பொழி திருமலைக் குமாரசுவாமி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருக்குற்றாலம்— திருமலைக் குமாரசுவாமி தேவஸ்தானம்— திருநெல்வேலி மாவட்டம்.
3. ஸ்ரீ சுவேதாரண்யேசுவரர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு—சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம்—தஞ்சை மாவட்டம்.
4. கலியபெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி— ஸ்ரீ கலியுகவரதராஜ சுவாமி தேவஸ்தானம்— திருச்சி மாவட்டம்.
5. ஸ்ரீ பர்வதவர்த்தனி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இராமேசுவரம்— இராமநாதசுவாமி தேவஸ்தானம்— இராமநாதபுரம் மாவட்டம்.
6. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மதுரை— மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம்— மதுரை மாவட்டம்.

### ஆகமபாடசாலைகள்:

1. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி — மதுரை மாவட்டம்.
2. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், —திருச்செந்தூர்— திருநெல்வேலி மாவட்டம்.
3. ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்புகலூர்— தஞ்சை மாவட்டம்.
4. அள்ளூர் ஆகமபாடசாலை, அள்ளூர்— எல்லாத் தேவஸ்தானங்கள் சார்பிலும்— திருச்சி மாவட்டம்.
5. ஹரிகதா காலட்சேபப் பயிற்சிப் பள்ளி, தஞ்சை— எல்லா அறநிலையங்களின் சார்பிலும் —தஞ்சை மாவட்டம்.

—தொடரும்

# இராமலிங்காஷ்டகம்

## அறிமுகம்

இஃது இராமலிங்க + அஷ்டகம் எனப் பிரியும். இராமலிங்கத்தைப் பற்றிய எட்டுச் செய்யுட்கள் கொண்ட நூல் எனப் பொருள்படும். இராமன் பூசித்த இலிங்கம் **இராமலிங்கம்** என்பர். அஃதாவது, சிறந்த வேத வித்தகனும் சிவனடியானுமாகிய இராவணனைக் கொன்ற பழி தீரும் பொருட்டு, இராமபிரான் இராமேச்சுரம் என்னும் தலத்தில் இலிங்கம் ஒன்றைத் தாபித்துப் பூசித்து வழிபட்டார் என்பது வரலாறு.

இதனைத் "தேவியை வவ்விய தென் இலங்கைத் தசமா முகன் பூவியலும் முடி பொன்று வித்த பழிபோய் அற ஏவியலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்" எனத் **திருஞானசம்பந்தரும்**, "தேடிமால் செய்த கோயில் திரு இராமேச்சுரம்," "செங்கண்மால் செய்த கோயில் திரு இராமேச்சுரம்" எனத் **திருநாவுக்கரசரும்** பாடியருளிய தேவாரத் திருப்பாடல்கள் கொண்டு தெளியலாம்.

இத்தகைய இராமேச்சுரம் இராமலிங்கப் பெருமானைக் குறித்துப் பின்வரும் எட்டுப் பாடல்களையும் இராமலிங்காஷ்டகம் என்னும் சிறு நூலாகப் பாடியவர், கவியரசு. **திரு. கு. நடேச கவுண்டர்** அவர்கள் ஆவர். இவர்கள் செந்தமிழ்ப் புலமையும், சித்தாந்தசைவச் செந்நெறி யுணர்வும் நிரம்பிச் சிறந்து திகழுபவர்கள். கோவைப் பேரூர்ச் **சாந்தலிங்க சுவாமிகள்** திருமடத்தின் சார்பில் நடைபெறும் தமிழ்க்கல்லூரியிற் பேராசிரியராகப் பணிபுரிந்து ஒய்வு பெற்றிருப்பவர்கள். முன்னரே பல பிள்ளைத் தமிழ் நூல்களும், பிற கவிதை நூல்களும் இயற்றிப் புகழ் பெற்றிருப்பவர்கள்.

இத்தகைய தண்டமிழ்ப் பெருஞ்சான்றோர் ஒருவர் இயற்றிய "இராமலிங்காஷ்டகம்" என்னும் கவிதை, நமது **அறநிலைய ஆணையர்** அவர்கள் விரும்பியபடி பொழிப்புரை எழுதப் பெற்று, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்

1. பால சந்த்ர சூட ! பொங்கு
 கங்கை தங்கு செஞ்சடா
பார வீர ! வேரி துன்று
 கொன்றை தும்பை மா லையாய் !
சீல ராம சந்த்ர னன்பு
 கொண்டு முன்பு பூசைசெய்
சேது மீதி லங்கு தேவ
 தேவ ! ராம லிங்கமே !

**(உரை)** இளம்பிறையைச் சூடியவனே! பொங்குகின்ற கங்கை நதி தங்கியிருக்கின்ற சிவந்த சடை முடியினையுடைய வீரனே ! தேன் நிரம்பிய கொன்றை மலர் தும்பை மலர்களால் தொடுக்கப் பெற்ற மாலைகளை அணிந்திருப்பவனே ! ஒழுக்கம் மிக்க இராமச்சந்திரப் பெருமான் பக்தி மேற்கொண்டு முற்காலத்தில் வழிபாடு செய்த, சேதுவாகிய இராமேச்சுரம் என்னும் தலத்தின்கண் எழுந்தருளி, விளங்குகின்ற, தேவர்களுக்கும் தேவனே! இராமலிங்கமே! (போற்றி).

பால சந்திரன்—இளம் பிறை

சடாபாரம்—சடை முடி

வீர—'ஈர' எனவும் பிரிக்கலாம்; குளிர்ந்த.

சீலம்—ஒழுக்கம், நற்பண்புகள்.

சேது—அணை, கரை. அஃது ஈண்டுக் 'கங்கையின்கண் இடைச்சேரி' என்றாற் போல இலக்கணையாய், இராமேச்சுரம் என்னும் தலத்தைக் குறித்தது.

தேவதேவன்—தேவர்களுக்கெல்லாம் தேவன், மகாதேவன் எனச் சிவபெருமானைக் குறித்தது.

2. கால கால ! சூல பாணி !
 காம கோப ! சாபவே
தண்ட ! சாம கண்ட ! நீரை
 யுண்ட மேக மேனியான்
சேலினேர்க ணாள்வை தேகி
 யோடி ராம னார்தொழும்
சேது மீதி லங்கு தேவ
 தேவ ! ராம லிங்கமே !

**(உரை)** காலனுக்கும் காலனாக விளங்கிக் கடிந்தவனே ! சூலத்தினைக் கையில் ஏந்தி யிருப்பவனே ! காமதேவனைக் கோபித்தவனே ! மேருமலையை வில்லாக வளைத்தவனே ! நீலகண்டத்தினை யுடையவனே ! கடலின் நீரை முகந்து கொண்ட காளமேகம் போன்று கரிய அழகிய திருமேனியையுடைய இராமபிரான் சேல் மீன் போன்ற கண்களையுடைய சீதைப் பிராட்டியோடு சேர்ந்து வழிபட்ட, இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவதேவனே ! இராமலிங்கமே ! போற்றி.

காலன்—இயமன், கூற்றுவன்
பாணி—கை, (பண்ணுவது)
சாபம் – வில்
வேதண்டம்—மலை, மேரு
சாமகண்டம்—நீலகண்டம்; சாம வேதம் பாடும்கண்டம் எனினுமாம்.
சேலின்நேர்—சேல்மீனைப் போன்ற
வைதேகி—சீதை; விதேக நாட்டில் தோன்றியவள்.

3. வன்னி தண்ணி லாவ ருக்கர்
என்னும் மூன்று கண்ணனே !

மலையி ராசன் மகளி னுசை
மகிண ! ஐந்தி ரட்டிநீள்

சென்னி யான தான னவி
யுண்ட வில்லி ராமனர்

சேது மீதி லங்கு தேவ
தேவ ! ராம லிங்கமே !

**(உரை)** நெருப்பு, குளிர்ந்த சந்திரன், சூரியன் என்னும் மூன்று கண்களை யுடையவனே ! மலையரசனின் மகள் ஆகிய பார்வதிதேவியின் காதல் மிக்க கணவனே ! பத்துத் தலைகளையுடைய இராவணனின் உயிரைப் பருகிய வில்லை யுடைய இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற தேவதேவனே ! இராமலிங்கமே ! போற்றி.

வன்னி—நெருப்பு
அருக்கன்—சூரியன்
மகிணன்—மகிழ்நன், கணவன்
ஐந்திரட்டி—பத்து
சென்னி – தலை
தானன் – தானவன், அரக்கன்

மலைஇராசன் மகள்— தலத்து அம்பிகையின் பெயரைக் குறித்தவாறு, இராமேச்சுரத்தில் உள்ள அம்பிகைக்கு மலைவளர் காதலி என்பது பெயர். "அலைவளர் தண்புனல் வார்சடைமேல் அடக்கி ஒரு பாகம் மலைவளர் காதலி பாட ஆடி மயக்கா வரும் மாட்சி" எனத் திருஞான சம்பந்தர் தேவாரத்திலும், "மலைவளர் காதலிப்பெண் உமையே" எனத் தாயுமானவர் பாடலிலும் வருதல் காணலாம். வடமொழியிற் பர்வத வர்த்தனி என்பர்.

4. ஆமை யோடு கோடும் ஏன
எயிறும் அண்டம் ஆண்டபேர்

அமரர் அங்க மொடு புயங்கம்
இசைய லங்கல் மார்பனே !

தீமையோ டிலங்கி லங்கை வில்லி
னுற்சி தைத்தமால்

சேது மீதி லங்கு தேவ
தேவ ! ராம லிங்கமே !

**(உரை)** ஆமையின் ஓடும், வளைந்த பன்றியின் கொம்பும், அண்டங்களை யெல்லாம் அரசு செலுத்திய பெரிய பெரிய தேவர்களின் அங்கங்களும், பாம்புகளும் அணிந்து மாலை பொருந்திய மார்பை யுடையவனே ! தீய செயல்களோடு சேர்ந்து விளங்குகின்ற இலங்கைமாநகரினை வில்லினால் அழித்தவர் ஆகிய இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவதேவனே ! இராமலிங்கமே ! போற்றி.

கோடும்—வளைந்த
ஏனம்—பன்றி
எயிறு—பல், கொம்பு
அங்கம்—எலும்பு
புயங்கம்—பாம்பு
அலங்கல்—மாலை

5. ஆதி வேதம் ஆதி யேழி
ரண்டு விஞ்சை தேறினர்

ஐந்த டங்கி ஆறும் மாறும்
அந்த ணாளர் சிந்தையாய்

சீதை மாதின் ஆவி யாய
ராம னூர்தொ ழும்பதா !

சேது மீதி லங்கு தேவ
தேவ ! ராம லிங்கமே !

**(உரை)** பழமையான வேதம் முதலிய பதினான்கு வித்தைகளையும் கற்றுத் தெளிவு பெற்றவர்களும், ஐம்பொறிகளும் அடங்கி, ஆறு பகைகளும் நீங்கப் பெற்ற முனிவர்களைப் போன்ற தூய மனத்தை யுடையவராய், சீதைப்பிராட்டியின் உயிர் போன்ற கணவர் ஆகிய இராமபிரான் பணிந்து வழிபட்ட பாதங்களையுடை யவனே! இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவ தேவனே! இராமலிங்கமே! போற்றி.

ஆதி—பழமையான
ஆதி முதலிய
ஏழிரண்டு—பதினான்கு

விஞ்சை—வித்தைகள். அவையாவன : சிக்கை கற்பசூத்திரம் வியாகரணம் நிருத்தம் சந்தோவிசிதி சோதிடம் என்னும் வேதஅங்கம்ஆறும்; புராணம் நியாயநூல் மீமாஞ்சை மிருதி என்னும் வேதஉபாங்கம் நான்கும்; ஆயுள் வேதம் வில்வேதம் காந்தருவ வேதம் அருத்தநூல் என்னும் உபவேதம் நான்கும் ஆகிய பதினான்குமாம்.

ஐம்பொறிகள்—மெய் வாய் கண் மூக்கு செவி
ஆறுபகைகள்—காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம்
மாறுதல்—நீங்கி இல்லையாதல்
பதா — பாதங்களையுடையவனே! 'பாதம்' என்னும் பதம் எனக் குறுகி வந்தது.

6. வஞ்சம் மிஞ்சும் ஐம்பு லன்ம
யங்கும் நெஞ்சு வாய்ந்தநான்

வம்பி லேயு ழன்று துன்பு
மருவு றுமல் அருள்செயாய்!

செஞ்சொ லார்பு கழ்ந்து பாடு,
சீரி ராம னார்தொழும்

சேது மீதி லங்கு தேவ
தேவ! ராம லிங்கமே!

**(உரை)** வஞ்சகம் மிகுந்த ஐம்பொறிகளால் மயங்குகின்ற நெஞ்சினை வாய்த்திருக்கின்ற பாவியாகிய நான் வீணான செயல்களிலே அலைந்து துன்பம் அடையாமல் அருள் புரிவாயாக! செம்மையான சொற்களைக் கையாளுகின்ற சிறந்த கவிஞர்கள் புகழ்ந்து பாடுகின்ற சிறப்பை யுடைய இராமபிரான் வழிபட்ட, இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவதேவனே! இராமலிங்கமே!

வம்பு—வன்பு, வீண் தொல்லை.
மருவுறுமல்—அடையாமல்
செஞ்சொலார்—சிறந்த கவிஞர்கள்

7. மட்ட றுத அட்ட புட்ப
மா லை தீப தூ பநீர்

மாசி லாத நேசம் என்ப
கொண்டு பூசை செய்பெரும்

சிட்ட ரோடு கூடும் வாழ்வெ
னக்க ருள்க! ராமனார்

சேது மீதி லங்கு தேவ
தேவ! ராம லிங்கமே!

**(உரை)** தேன் நிரம்பிய சிறந்த எட்டு மலர்களாலாகிய மாலையும், தீபமும் தூபமும் நீரும், குற்றமில்லாத மெய்யன்பும் என்பவற்றைத் தொகுத்துக் கொண்டு, வழிபாடு புரிகின்ற பெரிய சிறந்த அடியவர்களுடன் கலந்து மகிழ்கின்ற நல்ல வாழ்வை எனக்குக் கொடுத்தருள்வாயாக! இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவதேவனே! இராமலிங்கமே!

மட்டு-தேன், வாசனை
அட்டபுட்பம்-எட்டு மலர்கள்; கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் எட்டுக் குணங்களையும் எட்டு மலர்களாகக்கூறுதலும் உண்டு.
சிட்டர்-சிரேஷ்டர், மேலோர்

8. பழுதி லாத செஞ்சொன் மாலை
அழுது சாத்து பத்தர்தம்

பத்தி, ஞான புத்தி, மற்று
நல்ல வுள்ளம் நல்கியே,

செழுமை யான வாழ்வு மேவ
அருள்க! சீதை காதலான்

சேது மீதி லங்கு தேவ
தேவ! ராம லிங்கமே!

**(உரை)** குற்றம் அற்ற செம்மையான சொற்களால் பாடப் பெற்ற புகழ்மாலைகளை அன்பினால் உருகி அழுதுகொண்டே சூட்டுகின்ற அடியவர்களின் பக்தியையும், ஞானம் அமைந்த புத்தியையும், மற்றும் நன்மைமிக்க உள்ளத்தையும் கொடுத்து, செழிப்புமிக்க வாழ்க்கையானது பொருந்தும்படி எனக்கு அருள்செய்க! சீதைப் பிராட்டியின் காதலர் ஆகிய இராமபிரான் வழிபட்ட இராமேச்சுரம் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற தேவ தேவனே! இராமலிங்கமே!

பழுது-குற்றம்
செழுமை-செழிப்பு
காதலான்-கணவன்

9. தரும மூர்த்தி யான ராம
சந்தி ரன்ச மைத்தநீள்
தாவில் சேதி லங்கு ராம
லிங்க னுரை யின்பி னுல்,
அருமை யான தமிழி லேந
டேசன் சொன்ன அட்டகம்
அன்பி னேடு பாடு வார்கள்,
இன்ப மாக வாழ்வரே.

**(பயனுரை)** தருமத்தையே வடிவமாக உடையவர் ஆகிய இராமச்சந்திரர் செய்து அமைத்த, நீண்ட அழிவில்லாத சேது என்னும் இராமேச்சுரம் ஆகிய தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற இராமலிங்கப் பெருமானை இன்பமேலீட்டினுல், அருமை வாய்ந்த தமிழிலே நடேசன் பாடிய எட்டுச் செய்யுட்கள்கொண்ட இந்நூலை அன்புடன் பாடித் துதிப்பவர்கள், இறைவனருளால் இவ்வுலகில் இன்பங்கள் ஓங்கித் துன்பங்கள் நீங்கி நல்வாழ்வு வாழப் பெறுவார்கள்.


தரும மூர்த்தி-தருமமே வடிவமாக உடையவர்; தருமங்களைப் பாதுகாக்கும் மூர்த்தியாக விளங்குபவர்.

சமைத்த-உண்டாக்கிய ; தோற்றுவித்த
தாவுஇல்-அழிவு இல்லாத,
அட்டகம்-எட்டுச் செய்யுள் கொண்ட நூல்;
அஷ்டம்-எட்டு

நடேசன்-தன்னைப் பிறன்போற் கூறியது; இது தன்மையிற் படர்க்கை வந்த வழுவமைதி.

இச்செய்யுள் 'பலச்ருதி' எனப்படும். திருஞான சம்பந்தர் பாடி யருளிய திருக்கடைக்காப்புப் போல்வது இது.

—ஆசிரியர்



# மாலைமாற்றுப் பதிகம்

(சித்திர கவிச் சித்திரம்)

★

சித்திரம் வரைந்தவர் :
**கவிஞர்**
**திரு. எம். பிரம்மாநந்தா**
சிவகங்கை

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பின்னர் ஸாரக்ஷேத்ரம் எழுந்தருளி மாமதலைப் பிரானைத் தொழுது திருக்கண்ணங்குடி அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள பரமனை வணங்கித் திருநாகை சென்று திருநாகையழகியாருடைய எழிலையெல்லாம் கண்டு களிகொண்டு, சோழ மண்டலத்தேயிருந்த தர்சன கண்டகரை யெல்லெல்லாம் கண்டித்துத் திருத்தினர்.

உயரவெடுத்த முக்கோல் உலகெலாம் வென்றி கொள்ளப் பெயரும் எம்பெருமாளுக்குத் திருவணையை ஸேவிக்க வேண்டும் என்ற அவா மேலிட்டது. அதனை நிறைவு செய்யக் கருதியவராய்ப் புறப்பட்ட உடையவர் திருமெய்யம் சேர்த்து ஸத்ய மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை வணங்கித் திருக்கோட்டியூர் சென்ருர். அங்கே உரக மெல்லணையானையும், ஸௌம்ய நாராயணனையும், எம்பெருமான் வெள்ளியான் கரியான் மணிநிறவண்ணன் என்றிருக்கிற தன்மைகளையும், வணங்கித் தெற்காழ்வார் வடக்காழ்வார் இவரைஸேவித்து "காசின் வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டுத் தேச வார்த்தை படைக்கும் வண்கையினரான ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியோடு சிலகாலம் அங்வயித்து மகிழ்ந்தார். தானறப்பெய்து மன்னுயிரை வாழ்விக்கும் தடமுகில் போன்று தனக்கு ஆத்ம ஹானி ஏற்படு மென்றும் கருதாது தாம் அர்த்தவிசேஷங்களை அள்ளிச் சொரிந்த தலமல்லவா அது! அப்பழைய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர் உள்ளத்தே ஆனந்தப் பெருக்காகப் பாய்ந்தது. அங்கே நம்பிகள் வைத்த சோதனைகள் எப்படி தம் உள்ளத்தைப் பண்படுத்தியது என்பதனை எண்ணி நம்பிகளிடத்திலே தமக்குள்ள நன்றியைப் பன்மடங்காக்கிக் கொண்டார் உடையவர். சிலநாள் கோட்டியூரில் தங்கிப் பின்னர்த் திருப்புல்லாணி நோக்கிப் பிரயாணமானர்.

அங்ஙனம் புறப்பட்ட உடையவர் "பொன்னலரும் புன்னை சூழ் புல்லாணி" யைக்கிட்டி அங்கே தர்ப்பாஸன மழகியாரை ஸேவித்துக் கடற்கரையைக் கிட்டி அங்கே கருணையங்கடல் கருங்கடல் நோக்கிக் கிடந்த கிடக்கையை மனத்திலே எண்ணியுருகியவராய் அப்பெருமான் கொம்பு போல் சீதை பொருட்டுக் கடலையடைத்து ஸேது கட்டியமையையும் அதன் பெருமையையும் உளங்கொண்டு "ரகுவீரபதன்யாஸ பவித்ரீகிருத பாம்ஸவே தசகண்ட சிரச்சேத பானவேஸேதவே நம:" என்று பரமபாவனமான ஸேதுவை தரிசித்து அம்மஹாதீர்த்தம் ஸ்ரீ ராமபிரானின் சீர்த்தி போலே பெருகித் தேங்கி நிற்பதை அநுஸந்தித்து "படி வானமிறந்த பரமன் பவித்திரன் சீர்த்திபோலே பெருகித் தேங்கி நிற்பதை அநுஸந்தித்து "படிவானமிறந்த பரமன் பவித்திரன்சீர் செடியார் நோய்கள் கெடப்படிந்து குடைந்தாடி" என்று ஆழ்வார் அவகாஹித்தபடி தாம் அந்த ஸேது தீர்த்தத்திலே தம் தாபம்தீரத் தீர்த்தமாடினர். ராவண வதத்தின்பின் புஷ்பகத்திலே பிராட்டியோடு செல்லுங்கால் பெருமான் அங்கிருந்தே கீழேயுள்ள ஸேதுவின் மகிமையைப் பிராட்டிக்குரைத்தருளித் தம்முடைய வில்லினுலே அவ்வணையை வாய்கீறிவிட்ட இடமான தனுஷ்கோடியையும் கடாக்ஷித்து "கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தனல்லால் ஒரு தெய்வம் யானிலேன்" என்றும் "சிலையினல் இலங்கை செற்ற தேவனே தேவனுவான்" என்றும், "வானின் நிழிந்து வரம்பிகந்தமா பூதத்தின்வைப் பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப, கூனும் சிறிய கோத்தாயும் கொடுமையிழைப்பக் கோல்துறந்து கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்தே" என்றும் "அலங்கலில் தோன்றும் பொய்ம்மையாமெனப் பூதமைந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம் கலங்குவது எவரைக் கண்டால் அவரன்றே கைவிலேந்தி இலங்கையில் பொருதாரன்றே மறைகளுக்கிறுதி

யாவார்" என்றும் எவன் ராமனாக அவதரித்தானோ அவனே பராத்பரன் என்ற உண்மையை நிலைநாட்டிப் பிறமநத்தாரைத் திருத்தி அவர்களை, "தேவதேவனைந் தென்னிலங்கை எரியெழச் செற்ற வில்லியைப் பாவநாசனைப் பங்கயத்தடங் கண்ணனைப் பரவுமினோ" என்று அவரனைவர்க்கும் உபதேசித்து மகிழ்ந்தார். இப்படி ராமப்ரபாவத்தின் பெருமையைப் பரக்கப்பேசவே "ஒரு வில்லாலோங்கு முன்னீரடைத்து உலகங்களுய்யச், செருவிலே அரக்கர்கோனைச் செற்றநம் சேவகனார் மருவிய பெரிய கோயில் மதில் திருவரங்கம்" என்ற அடியார் பாததூளியின் பாசுரம் நினைவுக்கு வந்தது உடையவருக்கு. வரலுமே திருவரங்கம் சேரவேண்டும் என்று அவர் உள்ளம் பாரித்தது. உடையவர் திருவரங்கம் நோக்கி விரைந்தார்.

அங்ஙனம் திருவரங்கம் சென்ற உடையவர் காவிரியின் தென்கரையை யடைந்த அளவிலே அவர் எழுந்தருள்கின்றமை யறிந்த திருவரங்க ஸ்ரீவைஷ்ணவரும், கோயில் நகரே குடியிருப்பாக வாழ்வாரும் யாவரும் திரண்டு, பெருமாள் பதினான்கு வருஷம் வனவாஸம் முடிந்து திருவயோத்திக்கு எழுந்தருள்வது கேட்ட பரதாழ்வான் சத்ருக்னன், அயோத்தி நகரவாசிகள் அனைவரும் இணையிலா மனவெழுச்சியோடு எதிர்கொள்ளச் சென்றமைபோலே மனம் களிப்பால் பூரித்தவர்களாய் உடையவரை எதிர்கொள்ள முதலியாண்டானை முன்னிட்டுக்கொண்டு சென்றனர்.

"யதிராஜர் வந்தார்! யதிராஜர் வந்தார்!! யதிராஜர் வந்தார்!!! எதிராருமில்லாதார் வந்தார்! மதிராசி ராமாநுஜர் வந்தார்! ஆமாறறியும் பிரான் வந்தார்! சீமான் சரணாகதி தந்தபிரான் வந்தார். அரணாகும் அங்கமழலோன் வந்தார்! முரணாகும் வாதியரை வெல்லும் முனிவந்தார்! மாநிலத்தில் வேதியரில் மிக்க மகன் வந்தார்! என்று பல்வகை விருதுகளையும் ஊதும் சின்னத்தொனி வானைப்பிளந்தது. "தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாம் கெழுமி ஆராத மனக்களிப்போடு அவர் திருப்புகழ்கள் பலவற்றையும் பாடி, "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம், யாம் பெறும்பேறு அனைவீரும் பெறுக!" "தொண்டீர் எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்று ஆர்த்தும்" என்று செல்வோர் மற்றையோரையும் கூவியழைத்து யாவரும் ஒரே திரளாய்ச் சென்று உடையவரை ஸேவித்து அவர் திருவடிகளிலே தங்கள் சிரம் வைத்துத் தெண்டனிட்டு விஜயஸ்ரீயோடு ஒளிரும் அவர் திருமுகமண்டலத்தையும், புடமிட்ட பொன் போல் மிளிரும் அவர் திருமேனியின் காந்தியையும் பசியன் சோற்றுக் குவியலைக் கண்டாற் போன்று நோக்கி நோக்கித் தம்மிரு கண்களென்னும் குவளையால் மொண்டு பருகி மகிழ்ந்தனர். உடையவரும் முதலிகளை நோக்கிப் பெரிய பெருமாளைச் செவ்வனே பேணி வந்தீர்களா? தென்னரங்கன் திருச்செல்வம் செழித்தோங்கித் திகழ்கின்றதா? எனப் பரிவுடன் வினவ, முதலிகளும் "ஆம் ஸ்வாமீ! தேவரீர் ஸங்கல்பத்தின் படியே பெரிய பெருமாளை ஸேவித்துப் போந்தோம். அவன் திருச்செல்வமும் ஒரு குறையுமின்றிச் செவ்வனே பெருகி வருகின்றது" என்று விநயத்தோடு விண்ணப்பித்தனர். எம்பெருமானாரும் கேட்டு உள்ள நிறைவு பெற்றார். திருவரங்கம் புக்க உடையவர் தம்முடைய சிஷ்ய கோடிகள் புடை சூழத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி புருஷகாரியான ஸ்ரீரங்க நாய்ச்சியாரைத் திருவடி தொழுது பலிபீடத்தைத் தெண்டனிட்டு வலமாக வந்து அழகிய மணவாளன் திருமண்டபத்தே சென்று "ஆழி வண்ண நின் அடியிணை அடைந்தேன் அணி பொழில் திருவரங்கத்தம்மானே" என்று ஆர்வம் பெருக வணங்கி ஸன்னிதியுள் சென்றார். சென்றவர் நெடுநாள் பசியன் சோற்றுத்திரள் கண்டாற்போலே ஆத்திரம் மிக்கு அங்கே சயனித்திருக்கும் கருமணியைக் கோமளத்தைக் கண்குளிர நோக்கி அவன் வடிவழகிலே தம்மை மறந்தவராய்க் கைகளாரத்தொழுது நின்றார்.

நின்றவரைப் பெருமாள் தாமும் நெடுநாள் தேசாந்திரம் சென்று திரும்பிய அருமை மகனைக் கண்ட தாயைப்போலே ஆதரம் பெருக விசேஷ கடாக்ஷம் செய்து தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் அளித்து "எம்பெருமானார் தர்சனம்" என்று நாம் கட்டளையிட்டருளியபடியே பாரத மண்டலமெங்கும் திரிந்து நன்கு நிலை நாட்டிவந்தீரோ?" என்று அன்புடன் வினவியருளினர்.

—தொடரும்

# தடுத்தாட் கொண்ட தன்மை

(சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை சு. துரைசாமி, மதுரை.)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பிரமத்தின் மிக்க பொருளில்லை; அதுவே தாமாகியவழித் தம்மினும் மிக்க பொருளில்லை; யாவரும் தம்மில் ஒத்தாரும் தாழ்ந்தாருமாவரேயன்றித் தமக்குத் தலைவராவார் யாரும் இல்லை ஆகவே, தாம் பிறர்க்கு அடிமையாய், ஆளாதற்கு இடமில்லை என்ற தற்போதம் வேதியர்பால் மிக்கிருந்தமை கண்டாராயினும், ஆரூரர்பால் உண்மையறிவு அவரை அறியாமே இயங்குவது உணர்ந்த சிவ வேதியர், "அறத்தாறு இன்றி, வன்திறல் செய்து என் கையில் ஆவணம் வலிய வாங்கி நின்று இவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை" என்று கூறுகின்றார். அக்கூற்று, "மையல் மானுட" மாகிய மயக்கத்திடை மறைந்து கிடக்கும் ஆரூரரின் இயற்கையறிவை எழுப்புகிறது. அதனால் அவர் சிவவேதியரின் நுண்ணிய குறிப்பை வியந்து "பழையமன்றாடி போலும் இவன்" என்று சொல்கின்றார். சிவஞானத் தெளிவு பிறக்கும் செவ்வியும் எய்துதலால், அவரை அறியாமே சிவ வேதியர்பால் ஆரூரர்க்கு அன்பு பொங்குகிறது. அதனை நுணுகிக் காணும் சேக்கிழார் பெருமான், "பண்பின்மிக்க விழைவுறு மனமும் பொங்க" என்று குறிக்கின்றார்.

புத்தூரில் தோன்றிய வழக்குத் திருவெண்ணெய் நல்லூர்க்குச் செல்கிறது; திருமணம் இடைமுறிந்து கெடுகிறது. வெண்ணெய் நல்லூரில் வேதியர் நல்லவை கூடுகிறது. போகும் போதே 'புனித நன்மறையோர் முன் ஆதியில் மூலவோலை காட்டி நீ அடிமையாதல் சாதிப்பன்" என்று சொல்லிச் செல்கின்றார். இங்கேயும், சிவத்துக்கும் உயிர்க்குமுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பு அனாதி என்பது தோன்ற "ஆதியில் மூலவோலை" எனச் சிறப்பிக்கப்படுகிறது.

சிவ வேதியரைத் தொடர்ந்து பின்னே செல்லும் ஆரூரர் திருவுள்ளத்தில், வேதியரது உரைகேட்ட போதும், ஓலையைக் கண்டபோதும் இருந்த பாச ஞானத் தற்போதத் தடிப்புப் பைய நெகிழ்கிறது. உள்ளம் ஈர்ப்புண்டு சிவ நெறியில் ஓடுகிறது. அதனைச் சேக்கிழார், 'செல்லும் நான்மறையோன் தன்முன் திரிமுகக் காந்தம் சேர்ந்த வல்லிரும்பு அணையுமா போல் வள்ளலும் கடிது சென்றான்" என்று உரைக்கின்றார். தடிப்புண்மை வல்லிரும்பு உவமையால் காட்டப்படுவது காண்கிறோம். அவர் உள்ளத்தில் எழுந்து நிலவும் அன்பின் திறம் கண்டே, ஆரூரரைக் "காதல் என் அடியான்" என்று சிவனாரும் தெரிவிக்கின்றார். வெண்ணெய் நல்லூர் வேதியர்கள் "நல்ல அந்தணர்" களேயாயினும், அந்நாளைய கருத்தே கொண்டவர்களாதலால், 'மறையவர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லை; என் சொன்னாய்?" என்று எடுத்துரைக்கின்றார்கள்.

சிவவேதியரது வழக்கையும் பிற நிகழ்ச்சிகளையும் கேட்ட வெண்ணெ நல்லூரினர், "ஆரூரர் ஓலையைக் கிழித்தெறிந்தது வெற்றி பயவாது" என முடிவு செய்து, பின்பு, ஆரூரர் அடிமை என்பது பற்றிய வழக்கை மேற்கொண்டு, அவரது கருத்துரையைக் கேட்க, அவர்,

> "அனைத்து நூல் உணர்ந்தீர்; ஆதி
> சைவன் என்று அறிவீர் என்னை;
> தனக்கு வேறு அடிமை என்று இவ்
> வந்தணன் சாதித்தானேல்,
> மனத்திலும் உணர்தற்கெட்டா
> மாயை என் சொல்லுகேன் யான்;
> எனக்கு இது தெளிய ஒண்ணாது"

என்று இயம்புகின்றார்.

இங்கே, வேதியர்க்குரிய வேத வேதாந்த நூல்கள் பலவும், "மறையவர் அடிமையாதல் மாநிலத்தில் இல்லை" என்ற கருத்தையே வற்புறுத்தினமை தோன்ற "அனைத்து நூல் உணர்ந்தீர்" என்றும், அக்கருத்து நடுநாட்டு ஆதிசைவ அந்தணரிடையும் நன்கு பரவியிருந்தமை விளங்க, "ஆதிசைவன் என்று அறிவீர் என்னை" என்றும் எடுத்த மொழி கொண்டு இயம்புகின்றார். வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தம் (ஆகம சைவத்துறை) எவ்வுயிரும் சிவத்துக்கு அடிமை என்பது ஆரூரர் மனத்தில் அப்பொழுது தோன்றாமையின் "மனத்தினால் உணர்தற் கெட்டா மாயை" என்றும், "என் சொல்லுகேன் யான்" என்றும் உரைக்கின்றார்.

அதுகேட்டதும், அவையிருந்த அந்தணர்க்கு மன நிறை கலங்குகிறது; அவர்கட்குச் சிவவேதியர் உரை வெவ்விதாகத் தோன்றுகிறது. அதனை மெய்ப்பிக்க முடியாது என்ற எண்ணத்தால், "ஆட்சி, ஆவணம், காட்சி என்ற முத்திறத்துள் ஒன்று காட்ட வல்லையேற் காட்டுக" என்றனர். சிவவேதியரும் அவர்களைப் பார்த்து 'முன்பு காட்டியது படியோலை; மூலவோலை என்பால் உளது; அதற்குத் தீங்குண்டாகாவாறு காத்தல் வேண்டும்" என்று கேட்டுக் கொள்ள, "நாங்கள் தீங்குற ஒட்டோம்" என்னவும், மூலவோலை யாவரும் காணக் காட்டப்பட்டது. யாவரும் கேட்கப் படிக்கவும் பட்டது. பலவாற்றால் உண்மை துணியப்பட்டதும், அவையினர், "நான்மறை முனிவனார்க்கு நம்பி ஆரூரர் தோற்றீர்; பான்மையில் ஏவல் செய்தல் கடன்" என்று தீர்ப்புக் கூறினர். ஆரூரரும், "விதிமுறை இதுவேயாகில் யான் இதற்கு இசையேன் என்ன இசையுமோ" என்று மொழிந்து கைதொழுதார்.

பின்பு அவையிருந்த அந்தணர்க்கு வெண்ணெய் நல்லூரில் தமது இருப்பிடம் காட்டுவார் போலச் சென்று திருக்கோயிலுட் புகுந்து ஒளித்தார். வானத்தே சிவன் காட்சி தந்து, "வன்மை பேசியதால் நீ வன்றொண்டன் என்னும் சிறப்புப் பெற்றாய்" என்று அருளினார். அதனால்; கரையிலா மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய நம்பி ஆரூரரை" "நமக்கு அருச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று இறைவன் பணிக்கின்றார், ஆரூரர் அடிபணிந்து "ஐயனே, நின் குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப்பாடுகேன்" என்னவும், "முன்பு என்னைப் பித்தன் என்று மொழிந்தனையாதலால், பித்தன் என்றே எடுத்துப்பாடுக" என்று அருளிச் செய்ய, ஆரூரர், "பித்தா பிறைசூடி" எனத் தொடங்கிப் பாடுவாராயினர்.

"பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே"

என்பது முதன்முதலாக அவர் பாடிய திருப்பாட்டு. இது "பித்தா" எனத் தொடங்குவது இறைவனது திருக்குறிப்பு. அப்போது அவர் உள்ளத்தில், தாம் இறைவனுக்கு ஆள் என்பது தெளிவாகியதும், முன்பெல்லாம் அதனை அறியாது ஆளல்ல எனத் தாம் பிணங்கியதும் நின்று நிலவுதலால், அதனை இறுதிக்கண் விதந்து "அத்தா, உனக்கு ஆளாய், இனி அல்லேன் எனல்" ஆகாது என்று மொழிகின்றார். சிவத்துக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு தெரிந்த வழி, அதற்குத் தான் அடிமைஎன்பது உணரக்கிடப்பினும், தெரியாத போது அடிமையன்று என்ற மறுப்புணர்வு இடைநின்றமை புலப்பட "இனி, அல்லேன் எனல் ஆமே" என்று எதிர்மறை வாய்பாட்டால் உரைக்கின்றார். இத்தகைய மறைப்புக்கும் மறப்புக்கும் இனி, என் மனம் இடனாகாதவாறு காத்தருளினாய் என்பார், "எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை வைத்தாய்" என்று கூறுகின்றார். மேலும், எவ்வகையாலும் மறவேனாயினும், முக்குணவயத்தால் மறத்தற்கு

மக்கள் மனம் இடமாதலைத் திருவுள்ளம் கொண்டு மறவாத் தன்மையுளதாகல் வேண்டி, "உன்னை என் மனத்து வைத்தாய்" என்றும், எனவே, நான் இனி ஆளல்லேன் எனல் ஆகாது என்று இயம்புகின்றார். இக்கருத்தையே, திருவாரூரில் கண் வேண்டிய போது, 'உமக்கு ஆட்பட்டோர்க்கு மாயம் காட்டிப் பிறவி காட்டி மறவா மனம் காட்டிக் காயம்' காட்டினாய் என்று கனிந்துரைக்கின்றார்.

இங்ஙனம், ஆளென ஆட் கொண்ட இறைவன் தன்னை மறவாமைப்பொருட்டு மாயம் காட்டி மறவா மனம் காட்டிய மாண்பை, வெண்ணெய் நல்லூரில் நீங்கி வேறு இடங்கட்குச் சென்றபோதும் நம்பி ஆரூரர் மறவாது மொழிகின்றார். அவர் திருக்கோலக்காவுக்குச் சென்றபோது, அங்கே ஞானசம்பந்தர் தாளம் பெற்ற அருட்செய்தியை நினைவு கூர்பவர், தம்மை வெண்ணெய் நல்லூரில் ஆவணம் காட்டி ஆட்கொண்டு அருளிய செயலை நினைந்து,

"அன்று வந்து எனை அகலிடத் தவர்முன்
ஆளதாக என்று ஆவணம் காட்டி,
நின்று வெண்ணெய் நல்லூர்மிசை ஒளித்த
நித்திலத்திரள் தொத்தினை .....
மெல்லியலுடனே கோலக் காவினில் கண்டு
கொண்டேனே"

என்று பாடுவாராயினர்.

ஒருகால், நம்பியாரூரர் திருநள்ளாறு சென்றபோது, தம்மை ஆவணம் காட்டி ஆட்கொண்ட இறைவனது அருட்டிறத்தினை நினைந்து வேறே நினைப்பதற்கு ஒன்று மில்லாமையை விதந்து

"வெண்ணெய் நல்லூரில்,
அற்புதப்பழ ஆவணம் காட்டி
அடியனா எனை ஆளது கொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே"

என்று பாடினர்.

வெண்ணெய் நல்லூர் வேதியரவையில் சிவபெருமான் மூல ஆவணம் காட்டும் வரையில் "அந்தணர்கள் வேறு அந்தணர்க்கு அடிமையாதல் இல்லை" என்ற கருத்தை கொண்டிருந்தமையும் காட்டப்பட்ட ஆவணத்தைக் கண்டதும் வியப்பு மேலிட்டமையும் எண்ணி "அற்புதப் பழ ஆவணம்" என்று எடுத்துரைக்கின்றார்.

வெண்ணெய் நல்லூரில் சிவனுக்குத் தாம் அடிமை என்பது தெளிவானபின், தமது ஊராகிய திருநாவலூர் அடைந்து திருக்கோயில் திருமுன்பாடிய திருப்பதிகத்தில் பாட்டுத் தோறும் "வெண்ணை நல்லூரில் வைத்து என்னை" ஆட் கொண்டார் என்று பாடுகின்றார். அங்ஙனம் பாடுமிடத்து, ஆவணத்தின் தனிப்பெருமை தோன்ற, "ஓர் ஆவணத்தால் எம்பிரானார் வெண்ணெய் நல்லூரில் வைத்து" என்னை ஆட் கொண்டார் என்றும், ஆவணத்தைக் காட்டித் தமது கருத்தை மெய்ப்பிக்கும்வரை சிவவேதியர் கொண்டிருந்த அடக்கத்தை வியந்த "அடக்கம் கொண்டு ஆவணம் காட்டி" ஆண்டார் என்றும் அதுவரையில் தாம் வன்மை மிகுந்து பேசியதை, 'அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாட் சபைமுன் வன்மைகள் பேசிட' என்றும், தாம் அங்ஙனம் பேசியதற்குக் காரணம் தமது இளமையும் இறைவற்கு எவ்வுயிரும் அடிமை என்றற்குத் "தன்மையினால் வன்மைகள் பேசிட" என்றும் கூறுகின்றார்

இத்திருப்பாட்டை மறுபடியும் முற்றும் காண்பது நன்று.

"தன்மையினால் அடியேனைத்தாம்
ஆட்கொண்ட நாள், சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார்.
புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்து
என்னைப் போகம் புணர்த்த
நன்மையினார்க் கிடம் ஆவது நம்
திருநாவலூரே"

இதன்கண், "தன்மையினால்" என்பதை "வன்மைகள் பேசிட" என்பதனோடு கூட்டி முன்னே ஒரு பொருள் கண்டோம்.

இனி, அதனை "தன்மையினல் ஆட் கொண்ட நாள்" என இயைத்தலும் உண்டு. அவ்வாறு இயைத்தவழி, எவ் வுயிர்க்கும் எப்பொருட்கும் தலைவனாக ஆண்டருளும் தன்மையினுல், அதனை உணராதிருந்த என்னைத் திருத்தி உணர் விக்கவேண்டி ஆட்கொண்டான் என் பது தோன்ற, "தன்மையினல் அடியே னைத் தாம் ஆட்கொண்ட நாள்" என்று கூறுகின்ருராம். அத்தன்மையை உண ரும் திறமின்றித் தாம் வன்மை பேசவும், அருள் வள்ளலாகும் தன்மையால், எனது வன்மைக்கு இரங்கினவர் போல "வன் ெருண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்" என்றும், பின்னரும் தாம், பொருள் வேண் டியும் இறைவன்பால் புன்மொழிகள் பேச, அவற்றைப் பொருளாகக் கொள்ளாத அப்பெருமான் பொன்னும் போகமும் அளித்த நலத்தை வியந்து, "புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்து என்னைப் போகம் புணர்ந்த நன்மையினுர்" என்று சொல்லி, திருநாவலூரில் வாழ்பவரை நோக்கி, இவ்வாறு நன்மை பல புரிந்த சிவனுக்கு இடம் நமது நாவலூர் என்பா ராய், இடம் திருநாவலூர் என்று மகிழ் கின்ருர். மேலைக் கடற்கரைக் கொடுங் கோளூரில் சேரமான் பெருமாளுடன் இனி திருக்கையில் திருவாரூரை நினைத்துக் கொண்ட நம்பி ஆரூரர், சிவமுதல்வன் "பொன்னைத் தந்து போகம் புணர்த்த நன்மையை" நினைந்து.

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்னதன்மையன் என்றறியொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்து அணி
ஆரூரானை மறக்கலுமாமே"

என்று பாடுகின்ருர். இங்கும், பொன் னும் போகமும் அருளியதை நினைந்தவர், அக்காலத்தே புன்மைகள் பேசிப் பிழை செய்ததை யெண்ணி, "பின்னை என் பிழையைப் பொறுப்பானை" என்றும் பிழைபொறுப்பர் என்று கருதிச் செய்த பிழைக்கு ஒறுப்பன செய்து கழுவாய் நல் கிய குறிப்பைப் "பிழையெலாம் தவிரப் பணிப்பானை" என்றும் குறிப்பது காண லாம்.

இங்ஙனம், பிழை செய்தொழுகிய தம் மைப் "பிழையெலாம் தவிரப் பணித்த முதல்வன்" அது செய்த முறையையும் விளக்குவாராய், "திருத்தித் திருத்தி" அவரது சிந்தையைத் தெளிவித்து அதனை இடமாகக் கொண்டான் என்று உரைக் கின்ருர். தாமும் இறைவனை நோக்கி, அவரது அருட்செயலை எடுத்து "திருத்தித் திருத்தி என் சிந்தை இடங்கொள் கயிலாயா" என்று தெரிவிக்கின்ருர்.

இவ்வாறு சிவபெருமான் தன்னை ஆட் கொண்ட தன்மையை நினைந்து மகிழ்ப வர், மகிழ்ச்சியால் மைந்துற்று,

"மற்றுநான் பெற்றது ஆர் பெற வல்லார்
வள்ளலே, கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்"

என்று சொல்லி ஏத்துகின்ருர். இறைவ னது பேரருளால் எய்தும் ஏற்றம் இவ் வண்ண மெல்லாம் இயங்குவது கண்டு அதனைப் போற்றி உய்வோமாக.

---

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி)

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உலகும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்

—பெரியபுராணம்.

# பாரதப் பண்போவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணுமலை.

## வேத வியாசர் (4)

### " கொக்கொக்க கூம்பும் பருவத்து "

இராசசூய யாகத்திற்குப் பிறகு பாண்டவர்களுக்குப் பெருந்துன்பம் உண்டாயிற்று. அப்பொழுதுதான் துரியோதனன் ஐவர்களிடத்திலும் அடங்காத பொருமை கொண்டிருந்தான். சூது மண்டபம் கட்டியதும் சூதாடியதும் துயிலுரிந்ததும் ஆகிய உலகத்திலொருவரும் செய்தறியாத புன்மையான செயல்களைச் செய்த காலமும் அதுதான். துன்ப காலங்களில் துணைசெய்ய வரும் இந்த வேதவியாசப் பெருந்தகையார் அப்போது அங்கு வரவேயில்லை. அது ஏன்? என்றதொரு பெருங் கேள்வியை இந்தப் பெருமகனையே நோக்கி ஒரு வேல்வேந்தன் கேட்கின்ருன். அவன் பாண்டவருக்குப் பேரனுக்கு மகனுகவந்த **செனமேசெயன்.**

செனமேசெயனுக்கு வியாசர் தரும் விடை:- முற்றிய வினைவசத்தால் வரும் செயல்கள் ஆண்டவன் கட்டளையாலமைவன. அது எவ்வளவு வெற்றிகண்ட பெரியவர்களாலும் தடுக்க முடியாதது. சிறுசெயல்களை முயற்சியால் மாற்றிக் கொள்ள முடியும். குறிப்பிட்ட மிகப் பெருஞ் செயல்கள் ஒருவராலும் கட்டுப்படுத்தக் கூடியனவாகா. இப்படியுள்ள மிகுவினைபயந்த செயல் துரியோதனன் கொடுஞ் செயல்கள். அதனைக் குறுக்கிட்டுப் பயனில்லை யென்பதனை ஊன்றியறிந்தே வாளாவிருந்துவிட நேர்ந்தது எனக்கூறி முடித்துவிட்டார் வேதவியாசர்.

இப்பொருள் " நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை யறிவே மிகும் " என்றதனுள் உள்ள உண்மையறிவு என்பது என்ன? அதைத்தான் இந்நுணுக்கங்களை விரித்தோதப் புகும் சமயப் பெருநூல்கள் மூலவினையென்று மொழிகின்றன. இம்மூலவினை பண்டை வரலாறுகளில் நுண்ணறிவினரையும் மயக்கிவிட்டிருத்தலைக் காணலாம். கவிகள் இதனைத் திட்பநுட்பமாகக் கூறியுள்ளார்கள்.

> " அதிசயம் ஒருவரால் அமைக்கற் பாலதோ
> துதியுறு பிறவியின் இன்ப துன்பங்கள்
> விதிவசம் என்பதை மேற்கொ ளாவிடின்
> மதிவழி யால்விதி வெல்ல வல்லமோ? "

எனவரும் கம்பர் கவியைக் காணலாம். சானகியைக் கைவிட்டு அலைந்து உலைந்து ஆத்திரப்பட்டு நிற்கும் தசரத குமாரர்களைநோக்கி அவர்களுக்காக உயிர்விட நிற்கும், சடாயு வாக்கில் வைத்துக் கம்பர் இப்படியிசைக்கின்ருர். மிக முயன்று முயற்சி முட்டுப்படும் நேரத்தில் " வினைவசம் " என்பதை மேற்கொள்ளும் நிலையைப் பெருமக்கள் அடைந்துவிட நேருமாம். அதற்கப்பாலும் மேன்மக்கள் முயல்வார்களானுல், ஒருதலையாகப் பெரியோர் சொற்களுக்கு மரியாதை தந்து வரும் தக்கவர்களையே மேலும் மேலும் ஒறுக்க வேண்டிவருமாம். தீயவர்கள் சிறிதும் இறங்காமல் பெரியோர்களுக்குக் கட்டுப் பட்டதைப்போலவும், ஒருமுடிவிற்கு உடனடியாக வந்து விடுவார்கள் போலவும், தந்திரங்கள் செய்து கொண்டு இடையில் நிற்கும் நல்லவர்களைக் கொண்டே நல்லவர்களுக்குத் தீங்கைப் பெருக்கிக்கொண்டு, கரவாடும் வன்னெஞ்சர்களாக இருந்திருந்து தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவார்களாம்.

இந் நிலைகளையெல்லாம் மிகுதொலைவில் நின்றே உணர்ந்து கொண்ட அறிவுருவர் வியாச முனிவர், ஆதலால் துரியோதனன் பெருந்துன்பத்திற்கு அடிப்படையிட்ட காலங்களிலெல்லாம் அறியாதவர் போலமிக விலகியே யிருந்துவந்திருக்கின்ருர். வீடுமனுதிய பெரியோர்கள் அப்படியில்லை. அவர்கள் துரியோதன

னிடம் கெஞ்சிக் கெஞ்சி த்தங்கள் கருத்துக்களை யெடுத்துரைத்து ஒன்றும், உதவாமை கண்டபிறகே கைவிடலானார்கள். இது அடியோடு உதவாக்கறையென்று துரியோதனனை இளமையிலேயே கைவிட்டுவிட்டவர் வேதவியாசர்.

இன்றைக்கு உலகத்தில் நடக்கின்ற நடைமுறையும் இதுதானே? பெருமையுள்ளவர்கள் ஒவ்வொரு செயலிலும் இடை நிற்பவர்கள் சொற்களுக்குச் செவி கொடுத்துப் பொறுத்துக் கொள்ளுவதும் அந்தந்த நேரங்களையும் பயன் படுத்திக் கொண்டு தீயவர்கள் தங்கள் தீய செயல்களில் ஒவ்வொரு படியாக முன்னேறிவருவதும், கண் கூடாக இன்று தேசம் காணும் காட்சியல்லவா? சான்றாண்மையுள்ள ஆண்களும் பெண்களும் இதனால் எத்தனை அல்லலுறுகின்றார்கள், இத்தனைக்கும் பொறுத்திருந்து ஒருபடியாகத் துன்பந்தந்த கொடியவர்களை ஒழித்துக் கட்டுவதே இறைவனுடைய இயல்பானால் யாரென்னசெய்வது?

## வியாசர் மீட்டும் தோன்றுகின்றார்

துரியோதனன் அடிப்படை அட்டூழியங்கள் அனைத்தும் முடிந்துவிட்டன. பாண்டவரை வரும் பாஞ்சாலன் வனிதையும் நகர் நீங்கி நாட்டையும் விட்டுக் காட்டிடைப்புகுந்து **காமியவனம்** என்ற பெருங்காட் டெல்லையில் வதிந்திருக்கின்றார்கள். அங்கு மாமுனிவர் வந்து தோன்றினர். கண்டவுடன் ஐவரும் விரைந்து எதிர் சென்று இறைஞ்சி வரவேற்றார்கள். அழைத்துவந்து நல்ல தவசிட்டு இருக்கச் செய்தார்கள், அங்கு ஏது பாண்டவர்களுக்குத் தவிசென்று ஐயங்கொள்ளலாம். தவிசென்பது என்ன தெரியுமா? ஓலைத் தடுக்குதான். இதுகண்கவர் காட்சியில் கருத்துள்ள பெண்மணிகளால் நேரத்திற்குத்தக அமைத்துவைத்துக்கொள்ளப் பெறும். பனையின் மிக வெண்மையாகிய குருத்தோலையில் பல வகைச் சாயங்களை யேற்றிப் பற்பல சித்திர அரும்புகளுடன் மிக அழகுற அமைக்கப்படுவது பனைஓலைத் தடுக்கு. இதனை "தாலப் புல்லின் வால் வெண் தோட்டுக் கை வன் மகளிர் கவின்பெறப் புனைந்த செய்வினைத் தவிசில்" கணவனை இருக்கச் செய்தாள் எனக் கண்ணகி கோவலனுக்கு மதுரையில் மாதரியா ரில்லத்தில் இட்ட தவிசைப் பற்றி விளக்கி யிருப்பதைக் காணலாம். "**தவிசு தடுக்கே**" என்பது சேந்தன் திவாகரம். ஒரு குச்சு வீட்டில் தங்கும்போதும் விருந்தை எதிர் கொள்ளத் தக்க இவற்றையெல்லாம் தேடிவைத்துக்கொள்பவர்கள் தான் நல்ல இல்லுறை மகளிர். பாண்டவர் முனிவரை வரவேற்று இருக்கச் செய்து அவரடிகளில் தமது தலைபடிய வணங்கி, அவர் திருவடிகளைத் தமது கண்களில் ஒத்திக் கொண்டு போற்றினார்களாம். அதன்பின் வண்டுகள் மொய்க்கும் மாலை புனைந்து பகை யொடுங்க அரசாளும் துரியோதனன் தங்களுக்குச் செய்த வஞ்சனைகளையெல்லாம் கூறி வருந்தினராம்.


"கண்டெதிர் சென்று போற்றிக் கண்ணினும் சென்னி மீதும்
கொண்டனர் அவன்தன் பாதம்; குளிர்ந்தனர் உயிரும் மெய்யும்;
புண்டர நுதலினானைப் பூசனை புரிந்த பின்னர்
வண்டணி தாரான் செய்த வஞ்சகம் அனைத்தும் சொன்னர்"

எனக்கவி இசைக்கின்றது. நாடிழந்து காடுபோந்து பலநாள்கள் ஆயின. ஆயினும் தருமநந்தனன் அதுவரையிலும் யாரிடத்திலும் தனது குறைகளைக் கூறி முறையிட்டா னென்பதே வரவில்லை. ஆனல் வியாசரைக் கண்டவுடன் தேம்பி யழத்தக்க துன்பம் துளைந்தெய்த நிற்கின்றான். இதற்குக் காரண மென்ன? ஒரு நான்கைந்து இளஞ்சிறார்கள் சேர்ந்து விளையாடுகின்றார்கள். அவர்களில் ஒரு மூன்று வயதுள்ள சிறுவனொருவனே மூத்தவன். மற்ற குழந்தைகளெல்லாம் அவனைவிட மிகவும் சிறியவர்கள். ஓடியாடியபொழுது அந்த மூத்த பையன் கால்தடுத்து விழுந்துவிட்டான். அங்கு பூமியில் புதைத்த ஓட்டுப் பாளம் ஒன்று அவன் முழங்காலில் முட்டிவிட்டது. அடிகொஞ்சம் அதிகந்தான். சிறிது ரத்தமும் வந்தது. மற்ற குழந்தைகள் பதைத்தன. ஆனல் அவன் அப்போது அந்த அடியைச் சட்டை செய்யவில்லை.

துடைத்துக்கொண்டு எழுந்து அவர்களோடு விளையாடினான். பொழுது போகப் போகப் புண்ணும் சிறிது சிறிதாக உலரத்தலைப்பட்டது. மறுநாளைக்கெல்லாம் அது மறைதலாயிற்று. ஒரு வாரம் கடந்தது. ஏழு நாட்கள் இடைந்து விட்டன. அடுத்தநாள் அந்த சிறுவனுக்கு எண்ணெ முழுக்காட்டினாள் அவனது பாட்டி. அவள் வெந்நீரை ஊற்றி மெல்லென உடம்பைத் தேய்த்துக் கொண்டே வந்தாள். அடிப்பட்ட இடம் வந்தது. இரத்தங்கட்டி உலர்ந்துவரும் அந்தப் புண்ணைக் கண்டவுடன் அதுதன் கண்களில் பட்டதுபோல உள்ளம் கலங்கினாள் பாட்டி. இது என்னவென அவள் கேட்டவுடன் சிறுவனும் அழத்தொடங்கினான். சும்மா இருந்தவனை அழக் கிளப்பிவிட்ட அவனது பாட்டியே மனந்தாளாமல் ஆற்ற முயலுகின்றாள். அவனது துக்கம் அடங்கவில்லை. தேம்பித் தேம்பி அழுகின்றான் செல்வன். அன்புற்றுத் தன்னோடு அழுகின்ற அவனது பாட்டியை அவன் இழுத்துக்கொண்டே சென்றான். அவனது முழங்காலைப் புண்படுத்திய ஒட்டுப்பாளத்தைக் காட்டினான். அவனது அழுகையும் தேம்பலும் மிகுதியாயின. பாட்டி ஒரு கனத்த கல்லையெடுத்து அந்தப்பாளத்தை இடித்தாள். அவள் அந்த ஒட்டங்குச்சோடு பேசுகின்றாள். "அகம் பிடித்த ஓடே உனக்குக் கொஞ்சங்கூட அறிவில்லையா. எனது பேரனையா நீ இடித்துப் புண்படுத்துகிறது" என்று அவள் அங்கலாய்த்தாள். பேரன் சிறிது ஆறினான். அவனை உண்பதற்காக அழைத்துவரலானாள் அவள். இது உலகத்தில் எங்கும் நடக்கின்ற நிகழ்ச்சிதான். அடிபட்டபொழுது வலிக்காத அவனுக்கு ஏழுநாள் பொறுத்து அவ்வளவு துன்பம் எங்கிருந்து வந்தது? யாருக்கும் அன்பால் மிகுத்தவரும், தன்னைவிட ஆற்றலுள்ளவர்களும் உடனிருந்தால்தான் துக்கம் வருகின்றது. ஆதரவற்ற இடத்தில் அந்த துக்கமும் துன்பமும் எங்கே சென்று எப்படி ஒளித்துக்கொள்ளுமோ தெரியவில்லை.

வேதவியாசரைக் கண்டவுடன் பாண்டவர்களுக்குத் தோன்றிய துன்பச் சூழலும் இவ்வண்ணமானதுதான். துன்பநேரத்தில் எதிரிருந்த பெரியவர்களையெல்லாம் கண்கூடாகக் கண்டிருந்தும் அங்கு அவர்களுக்கு இத்துணைத் துன்பம் தோன்றவில்லை. இந்த வியாசரைக் கண்டவுடன் தான் பாட்டியின் பருவரல்கண்ட பேரனைப் போலவே ஆனார்கள் பாண்டவர்கள். உள்ளபடி முனிவனைக் கண்ட ஐவருள்ளமும் குழந்தை உள்ளமாகவே ஆகிவிட்டது. உணர்ச்சி வசப்பட்டு உருகுகின்ற அவனிபரைத் தேற்றத் தலைப்பட்டார் வியாசர். தன்னடைந்தோர் ஊன்றுகோலையொத்தவராம், ஒருவழுக்கல் நிலத்தில் ஊன்றுகோலுடையார் எப்படி அஞ்சாமல் நடக்க முடியுமோ அப்படி உலக வாழ்க்கையான முழுவழுக்கல் நிலத்தில் அச்சமற்று வழிநடக்க முடியுமாம். வியாசரைத் துணைகொண்ட பாண்டவர் வாழ்க்கைவழி!. "இழுக்க லுடை யுழி யூற்றுக்கோ லற்றே ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்" என்ற திருக்குறளை வியாசர் உரைக்கொப்பிட்டு ஒழுக்கத்திற்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார் வில்லிபுத்தூரார், அத்துணை மாட்சியுள்ள வியாசர் தருமனைப் பார்த்து நடந்து போன இன்பதுன்பங்களை யெண்ணிக் கொண்டிருப்பதும் சொல்லிச்சொல்லி மாழ்குதலும் தீவினைச் செயலாகும் என்பார்கள். அச்செயல் நிகழ்ச்சியிலுள்ள முயற்சிகள் பலவற்றைக் கெடுத்து எதிர்காலத்திற்கும் துன்பத்தை விளைப்பதாகும்; அவற்றை வெட்டென மறந்து விட வேண்டும். ஆனால், பெருந்துன்பங்களை மறப்பதென்பது எளியதல்ல. நம்மினும் துன்புற்றாரை யெண்ணுவோமானால் நமது துன்பம் அதைவிட எத்துணைச் சிறியது என்பது புலப்படும். அப்படி புலப்படும் பொழுது இன்பம் வந்து நின்றநிலையிலேயே எய்தும், இதைத் தக்கநேரங்களில் நினைப்பூட்டித் துன்பத்தையே இன்பமாக்கிக் காட்ட என் போன்றவர்களால் எளிதாக ஆகும். இந்த துணையைத்தான் நாங்கள் அன்பும் அறநெறியும் மிகுந்த உங்கள் போல்வாருக்குச் செய்ய முடியும் எனக்கூறி வேதவியாசர் மேலும் உரைப்பதானார்.

—தொடரும்



மன்னார்குடி இராஜகோபால சுவாமி கோயிலுக்கு, ஆக்டிங் கவர்னர்
திருமிகு சந்திரா ரெட்டியார் அவர்கள் வருகை தருதல்.

## பொருள் அடக்கம்


1. திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டின் சிறப்பு
2. வீர சைவம்
3. விடை தெரியுமா?
4. மாலைமாற்றுப் பதிகம்
5. 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'
6. விடை விளக்கம்
7. காலனைக் காலாற் கடிந்த கடவுள்
8. சித்திர கவிச் சித்திரம்
9. திருவெழு கூற்றிருக்கை
10. மதிப்புரை
11. அறநிலையங்களின் சார்பில் நடைபெறும் கல்வி நிலையங்கள்
12. இராமலிங்காஷ்டகம்
13. வைஷ்ணவ குருபரம்பரை
14. தடுத்தாட் கொண்ட தன்மை
15. பாரதப் பண்போவியங்கள்


139781

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.